Registered as a newes paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 30 ஆம் நாள் துல்கஃதா 17 (12-4-63) வெள்ளிக்கிழமை இதழ் 63

# திரு. ஜோன் புதிய மேயர்

## திருமலையில் தமிழ் இயக்கம் தீவிரம்

### பலவந்தம் கூடாது என எம். பி. அறிவுரை

யாழ்ப்பாணம், வெள்ளி

திருக்மோணமலையில் நடைபெற்றுவரும் தமிழியக்கம் பற்றி நேற்று நமது நிருபர் தமிழ்த் தந்திமூலம் அனுப்பிய செய்திவருமாறு:

தமிழ் இயக்கம் இன்றுடன் மூன்ருவது தினமா திருக்கோணமலே தபாற்கந்தோர் முன் தொடர்ந்து நடைபெறுகின்றது. தமிழில் கொடுக்கப்கப்படும் தந்திகளுக்கும் காசுக் கட்டளைகளுக்கும்பதிவு தபால்களுக்கும் தமிழிலேயே தபால் ஊழியர்கள் பற்றுச்சீட்டுக்கள் வழங்கி வருகின்றனர். தென்னிந்தியாவுக்கு அனுப்பப்படும் தந்திகள், பக்வுத்தபால்கள் யாவும் தனித் தமிழிலேயே அனுப்பப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ் இயக்கம் திருகோணமலையில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றது. இதைத் தொடர்ந்து இவ்வியக்கம் ஏனைய அயற் கிராமங்களில் உள்ள தபாற் கந்தோர்களுக்கு நகரிலுள்ள அரசாங்கத் தந்திகள் பதிவுத் தபால்கள் யாவும் தனித்தமிழிலேயே அனுப்பப்படுகின்றன என்பது குறிப்பிடற்பாலது.

தமிழ் இபக்கம் திருகோணமலையில் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றதைத் தொடர்ந்து இவ்வியக்கம் ஏனைய அயற்கிராமங்களில் உள்ள கந்தோர்களுக்கும் அரசாங்க காரியாலயங்களுக்கும் விஸ்தரிக்கப்பட இருக்கின்றது. இயக்கம் நடைபெறும் காலங்களில் மட்டுமே தமிழில் அரசினருடன் கருமங்களை வைத்துக் கொள்ளல் வேண்டும் என்ற எண்ணத்தைத் தவிர்த்து என்றும் எப்பொழுதும் தமிழிலேயே கருமங்களை நடத்துவோமென தமிழ்ப் பேசும் மக்கள் பிரதிக்ஞை செய்து கொள்ளல் வேண்டும்.

எம்மொழி ஆட்சியில் இருப்பது எம்கையில்தான் தங்கியுள்ளது என்று எல்லாம் தமிழ் இயக்கப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறினர். தபால் அலுவலகத்திக்கு வந்த ஒருவரிடம் எல்லாம் தமிழ் இயக்கத் தொண்டர் ஒருவர் இயக்கப் பிரசுரம் ஒன்றைக் கொடுத்தபொழுது அதை வாங்க மறுத்து "இது எல்லாம் சுத்த முட்டாள்தனம்" என அன்பர் ஆங்கிலத்தில் கூறியதைத் தொடர்ந்து ஏற்பட்ட சிறுவாக்குவாதத்தின் விளைவாக அன்பர் பிரதம தபால் அதிபரிடம் முறையிட்டார். அதற்கு தபால்அதிபர் "தபாற்தந்தோரின் வெளியில் நடக்கும் காரியங்களுக்கு என்னல் ஒன்றும் செய்ய முடியாது. பொலிசாரிடம் சென்று இதற்கு முறைப்பாடு செய்யுங்கள்" என்று கூறினர். இதன் பின் அவர் வெளியே சென்ருர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து திருமலை பாராளுமன்றப்பிரதிநிதி திரு. இராஜவரோதயம் தமிழ் இயக்கத் தொண்டர்களுககு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் "தமிழில் கருமங்களை நடத்துமாறு தமிழ்ப்பேசும் மக்களைப் பணிவுடன் வேண்டுங்கள். பலவந்தமாகக் கூருதிருங்கள். தமிழில் கருமங்களை நடத்துகிறவர்கள் நடத்தட்டும்" என்று கூறியுள்ளார்.

## அதிர்ஷ்ட சீட்டு மூலம் தெரிவு செய்யப்பட்டார்

### மாநகரசபை கோஷ்டிகளில் புதிய திருப்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

**நேற்று பிற்பகல் மாநகரசபைக் கமிஷனர் திரு. டி. டி. ஜயசிங்காவினுல் கூட்டப்பெற்ற விசேட கூட்டத்தில திரு. பி. எம். ஜோன் 'அதிர்ஷ்டவசமாக' யாழ்ப்பாண மேயராகத் தெரிவு செய்யப்பட்டர்.**

மாஜி மேயர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் தமது பதவியை ராஜினுமாச் செய்ததைத் தொடர்ந்து புதிய மேயர் தேர்தல் நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. யாழ்ப்பாண மாநகர சபையின் கடந்த இரண்டேகால் வருட ஆயுளில் வரியிறுப்பாளர், நேற்றைய மேயர் தெரிவுடன், நான்காவது மேயரைக் காணக்கூடியதாயிருந்தது.

கூட்டம் ஆரம்பித்ததும் இதுவரை நடைமுறையிலிருந்த மாநகரசபைக் கோஷ்டிகளில் மாற்றம் தென்படக்கூடியதாயிருந்தது மாஜி மேயர் கோஷ்டியை முற்று முழுதாக ஆதரித்துவந்த திரு. ஜோனின் பெயர் எதிர்க்கோஷ்டியினரான யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா கோஷ்டியினருள் ஒருவரான திரு. ஏ. ஜி. ராஜசூரியரால் பிரேரிக்கப்பட்டு அதே குழுவைச் சேர்ந்த ஹாஜி வி. எம். எம். அபுசாலியினுல் ஆமோதிக்கப்பட்டது. அடுத்த ஆச்சரிய சம்பவம், திரு துரையப்பா கோஷடியிலிருந்து எச்சந்தர்ப்பத்திலும் நழுவாத திரு. எம். ஜேக்கப் எதிர்க் கோஷ்டியினருடன் சேர்ந்து திரு. சோ. இராசரத்தினத்தின் சார்பாக வாக்களித்ததேயாகும்.

திரு. சோ. இராசரத்தினத்தின் பெயரை திரு. ஏ. நடராசா பிரேரிக்க, டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் ஆமோதித்தார். வாக்கெடுப்பில் திரு. ஜோனின் சார்பில் திருவாளர்கள் ஏ. ஜி. ராஜசூரியர், ஏ. துரைராசசிங்கம், என். தேவபாலசுந்தரம், கே. எஸ். நடராசா, ஹாஜி வி. எம். எம். அபுசாலி, குவாஸி எம். எம். சுல்தான் ஆகியோரும் திரு. சோ, இராசரத்தினம் சார்பில் திருவாளர்கள் ஏ. நடராசா, எம். ஜேக்கப், ஜே. எஸ். அழகையா, என். ரி. செல்லத்துரை, பி. எஸ். சோமசுந்தரம், டாக்டர் எஸ், ஏ. தர்மலிங்கம் ஆகியோரும் வாக்களித்தனர். தத்தம் வாக்குகளுடன் இரு அபேட்சகர்களும் தனித்தனியாக ஏழு வாக்குகள் பெற்றனர். திரு. ரி. எஸ். துரைராசா இரு அபேட்சகர்களுள் எவருக்கும் சாதகமாக வாக்களிக்கவில்லை சமதொகையான வாக்குகள் அளிக்கப்பட்டதால் அதிர்ஷ்டச்சீட்டு மூலமே மேயரைத் தெரிவு

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் மாதரின் தமிழியக்கம்

### தபால்நிலைய சிப்பந்தியுடன் வாதப் போர்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக் கட்சியின் எல்லாம் தமிழ் இயக்கம்' நேற்று யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் நான்காவது தினமாகத் தொடர்ந்து நடைபெற்றது. தமிழியக்கம் மேலும் பல தபாற் கந்தோர்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது. நேற்று சாவகச்சேரியில் நடத்தப்படவிருந்த தமிழியக்கம் 15-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

தமிழியக்கம் யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் நேற்று த்ருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. திருமதி அமிர்தலிங்கம் தலைமையில் மாதர்கள் சிலர் தபால் நிலையத்திற்கு வந்தவர்களிடம் எல்லா அலுவல்களையும் தமிழிலேயே செய்யும்படி கேட்டுக்கொண்டனர். ஆங்கிலத்தில் காசுக் கட்டளை நிரப்பிய ஒருவரிடம் திருமதி அமிர்தலிங்கம் தமிழில் அக்காசுக்கட்டளையை நிரடபுமாறு வேண்டிக்கொண்டார். அவர் காசுக் கட்டளையை நிரப்பும்போது இருபத்தைந்து ரூபாய் என்பதைத் தமிழில் 25 ரூபாய் என எழுதினர். தபால் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த ஒரு ஊழியரான பதஞ்சலிநாதன் என்பவர் இக் காசுக் கட்டளையைப் பார்த்துவிட்டு திருமதி அமிர்தலிங்கத்திடம் 'எல்லாம் தமிழியக்கத்தில் 25 ரூபாய் என்பதனையும் தமிழில் 'உரு' என எழுத வேண்டுமே' என்று கேட்டார்.

அப்போது திருமதி அமிர்தலிங்கம் பாடசாலையில் ஆரம்ப முதற்கொண்டு இவ்வாறுதான் கற்பித்துவருகிருர்கள் எனவும் இதில் தவறில்லை என்றும் கூறினர்.

திரு. பதஞ்சலிநாதன் இதனை தாம் வெளியே பிரசாரம்செய்யப்போவதாகக்கூறவே திருமதி அமிர்தலிங்கம் நீங்கள் இப்போதுகூடப் பிரசாரம் செய்கிறீர்களே, இனியும்தொடர்ந்து செய்வதினுல் பலனில்லை என்று கூறினர்.

திரு. பதஞ்சலிநாதன் மேற்கொண்டு எதுவும் பேசாமல் நிலைமையைச் சமாளித்தார்.

தமிழியக்கம் காங்கேசன்துறை, அளவெட்டி ஆகிய தபாற்கந்தோர்களிலும் ஆரம்பிக்கப்பட்டது. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இருதபாற் கந்தோர்களுக்கும் சென்றுபார்வையிட்டார்.

சாவகச்சேரியில் நேற்று நடைபெறவிருந்த தமிழியக்கம் 15-ம் திகதிவரை பின்போடப்பட்டுள்ளது. பிரசாரக்கூட்டத்தைத் தொடர்ந்தே தமிழியக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது. இன்று அரசாங்க விடுமுறைதினமாதலால் தமிழியக்கம் நடைபெருது. நாளை தொடர்ந்து நடைபெறும்.

## ரஷ்ய ராக்கெட்

மாஸ்கோ, ஏப்ரல் 11

ரஷ்யா சந்திரனுக்கனுப்பிய 'யூனிக் 4' என்ற ராக்கெட் வெற்றிகரமாக வேலைசெய்வதாகவும் ஆனல் அதன் தகவல்கள் சிக்கலாக இருப்பதாயும் மாஸ்கோ வானெலி அறிவித்தது.

## அளவெட்டியில் தமிழியக்கம்

மாவிட்டபுரம், வியாழன்

இன்று அளவெட்டி உப தபாற் கந்தோர் முன்னிலையில் எல்லாம் தமிழ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மாதகல், இளவாலை ஆகிய இடங்களில் உள்ள தொண்டர்களுக்கு தமிழில் தந்தி அனுப்பி வைத்தார்.

## 40 பேருக்கு நடக்க இயலாது

புதுடில்லி, ஏப். 11

சீன விடுவித்த 144 இந்திய யுத்தக் கைதிகளில் 30 அல்லது 40 பேர் நடக்கவும் சக்தியற்றவர்களுமாய் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## இன்று

கொழும்பு, வெள்ளி

இன்று அரசாங்க, வங்கி விடுமுறையாகும். கூட்டுறவு மொத்தவிற்பனைக் கடைகள் இன்று திறந்திருக்கும்

## கல்விக் கமிஷன் சிபார்சு

கொழும்பு, வியாழன்

இலங்கை பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெறுதல் பொதுச் சேவைக் கமிஷனுக்கு உத்தியோகஸ்தர்களை நியமிப்பது ஆகியவை பத்துவருட காலங்களுக்கு மத விகிதாசார அடிப்படையில் இருக்கவேண்டும் என்ற தேசிய கல்விக் கமிஷனின் சிபார்சை அமுல் நடத்துவதை கல்வி மந்திரி திரு பதியுதீன் மாமூத் விரும்பவில்லை.

இது சம்பந்தமான தேசிய கல்விக் கமிஷனின் சிபார்சை கல்வி மந்திரி விரைவில் மந்திரிசபையில் சமர்ப்பிப்பார். தனிப்பட்ட பாடசாலைகளை தேசிய மயமாக்குவது பற்றியும் மந்திரிசபை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளும்.

## வரி விளம்பரம்


### தேவை

ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்கள எஸ். எஸ். ஸி. தராதரத்துடன் செல்வாக்கும், நேர்மையும் நிறைந்தவர்கள், வெளிவேலைப் பிரதிநிதி, அபிவிருத்தியாளர் பதவிகட்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பம் 17-4-63-க்குப் பின் ஏற்கப்படமாட்டாது.

மனுப்பண்ணுக:-

மனேஜர், தபினுன்ஸ் அன் கறன்ரி கொம்பனி லிமிடெட், மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
864

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### ஆள்தேவை

பத்திரிகை சப்ளை செய்வதற்கு நேர்மையுள்ள வாலிபர் தேவை. சொந்தத்தில் சைக்கிள் வைத்திருப்பவராக இருக்க வேண்டும். விரும்புவோர் நேரில் வரவும். என். எஸ். திருநாவுக்கரசு, யாழ் பீ டா ஸ்டோர், 163, நாவலர்சந்தி, யாழ்ப்பாணம். 867

### தேவை

பதவி-குமாஸ்தா, பிரசாரகர், பரிசோதகர். கல்வி-தமிழ் அல்லது சிங்கள எஸ்.எஸ்.ஸி. (ஆங்கிலத்துடன்). வயது-20—40. இரு பாலாரும். குமாஸ்தா: பிணைப்பணம் ரூ. 1500/- சம்பளம் 100-72-160 (படிகளுட்பட). முடிவுதிகதி 20-4-63. த பினன்ஸ் அனட் கறன்றி கொம்பனி லிமிடெட், மாவிட்டபுரம், தெல்லிப்பழை.
893

### தேவை

நல்ல அனுபவம், நேர்மை கடுத்தர வயதுள்ள கார் சாரதி தேவை. குடும்ப இந்தியர் விரும்பத்தக்கது. எழுத்தில் மனுச்செய்யவும், "வின்ஸிலோ", த. பெ. எண் 49, யாப்பாணம்.
894


## பொலிஸார்-பொதுமக்கள் தொடர்பு

கொழும்பு, வியாழன்

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் உள்ள தொடர்பை, அதிகரிப்பதற்கு தற்பொழுது பொலிஸ் தலைமை நிலையத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு எதிராகப் பொதுமக்களால் செய்யப்படும் புகார்களுக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடந்த வருடம் 1,119புகார்கள் பொலிசாருக்குஎதிராக கூறப்பட்டுள்ளது. அதிகமான புகார்கள்விசாரணையின்பின் தள்ளப்பட்டது. இந்த விசாரணைகள், பொலிஸ் அதிகாரிகளாலும், பொதுமக்களின் பிரதிநிதிகளாலும் நடத்தப்பட்டவை.

பொலிஸ் அதிகாரிகள் விசாரணை சபையில் இருப்பதையிட்டு பாராளுமன்ற அங்கத்தவர்கள் தாங்கள் திருப்தியீனப்படுவதாகத் தெரிவித்துள்ளார்கள். பொலிஸ் உயர்தர அதிகாரி ஒருவரும் இதை ஆதரித்துள்ளார்.

இம்முறையை மாற்றுவது பற்றி சில உயர்தர அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இதையிட்டு வெகு சீக்கிரத்தில் ஒரு முடிவு வெளியாகும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## ஆஸ்பத்திரியில் தண்ணீர் இல்லை

பருத்தித்துறை மாவட்ட அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளராக இருக்கும் எங்களுக்கு குடிப்பதற்கோ, காலைக்கடன் கழிப்பதற்கோ, அன்றி வேறு தேவைகளுக்கோ போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. இன்று கிடைக்கும், நாளை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இதுவரை பலவித கஷ்டத்திற்குள்ளாகியிருக்கின்றோம். இக்கஷ்டத்திற்குக் காரணம் ஆஸ்பத்திரியில் இருந்த நீர் இறைக்கும் இயந்தியம் பழுதடைந்ததே. இந்த இயந்திரம் பழுதடைந்து சுமார் மூன்று வாரங்கள் ஆகிவிட்டன.

ஆனல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நோயாளர்கள் நலனில் எ. து வி த அக்கறையும் எடுக்கவில்லை என்றுதானே கூறவேண்டும். இதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து விரைவில் ஆவன செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

ஆஸ்பத்திரி நோயாளர்கள்.

பருத்தித்துறை
மாவட்ட அரசினர்
ஆஸ்பத்திரி.

● 

## கவனிப்பார்களா?

யாழ்ப்பாணம் பிரதான பஸ் நிலையத்திற்கு அருகில் இருக்கும் மல கூடம், பெயரளவில் தான் மல கூடமாகவே இருக்கிறதே தவிர அது ஒரு இருண்ட குகைபோல் காட்சியளிக்கிறது. இரவில் விளக்கு வெளிச்சம் இல்லை, தண்ணீர் குழாய் கிடையாது, வெளியூர்களிலிருந்து வரும் பிரயாணிகள் வெளிச்சமின்மையாலும், தண்ணீரின்றியும் பெரும் கஷ்டத்துக்குள்ளாகவேண்டியிருக்கிறது. வெளியூர் வாசிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக இந்த மல கூடத்திற்குத் தண்ணீர் வசதியும், வெளிச்ச வசதியும் செய்து தரவேண்டும். கவனிப்பார்களா?

"வெளியூரான்".

## அரிசிக் கூப்பன் மோசடி

கொழும்பு, வியாழன்

பங்கீட்டரிசிக் கூப்பன் மோசடி சம்பந்தமாக சி. ஐ. டி. பொலிஸாரால் தொடர்ந்து விசாரணை செய்கின்றனர். இது சம்பந்தமாக அவர்கள் விசாரணை நடத்திக்கொண்டிருந்த சமயத்தில், வெலிக்கடைப் பொலிஸார் மூன்று லட்சத்துக் கதிகமான கூப்பன்களை ஒரு டாக்ஸியில் இருக்கக் கண்டு பிடித்தனர். இது குறித்து ஒரு பெண் உட்பட நால்வரைப் பொலிஸார் காவலில் வைத்துள்ளனர்.

கொழும்பு பார்ன்ஸ் பிளேஸிலுள்ள உணவு கமிஷன் காரியாலயத்தைச் சேர்ந்த பல அதிகாரிகளை சி. ஐ. டி. பொலிஸார் விசாரணை செய்தனர்.

## நாணயசங்க நிர்வாகிகள்

தொல்புரம், வியாழன்

தொல்புரம் வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தின் 35-ம் ஆண்டுப் பொதுக்கூட்டம் சங்கமண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ப. முருகேசு தலைமையில் நடைபெற்றது. சங்கக் கடன் விநியோகம் பற்றியும் சங்கவளர்ச்சி பற்றியும் சங்கக்காரியதரிசி திரு. ச. கயிலாசபிள்ளை உரை நிகழ்த்தினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ப. முருகேசு, உப தலைவர்: திரு. செ. கந்தையா (இளைப்பாறிய கிராமஅதிகாரி), காரியதரிசி: திரு. ச. கயிலாசபிள்ளை, உப காரியதரிசி: திரு. க. பாலசுப்பிரமணியம், தனதிகாரி: திரு. மு நடராசா.

## ஆனந்தனுக்கு பாராட்டு

சாவகச்சேரி, வியாழன்

தென்மராட்சி சமாதான முற்போக்கு வாலிபர் சங்க ஆதரவில் மீசாலை தெற்கு சமாதான நிலையத்தில் ஆழ்கடல் வென்ற நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு ஓர் வரவேற்புப் பாராட்டு திரு. சாம்பசிவமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

வித்துவான் எம். சபாரத்தினம், ஆனந்தனின் அரிய சாதனையைப் பாராட்டிப்பேசும் போது கூறியதாவது:-

"எதிர்காலம் எங்கள் மத்தியில் வாழும் வாலிபர்கையில் தங்கியுள்ளது. ஆனந்தன் ஆழ்கடலை நீந்தி வெற்றி கண்டது மாத்திரமல்ல ஆங்கிலக் கால்வாயையும் நீந்தி முடிப்பேன் என்று மனத்திடத்துடன் கூறும் உறுதி மொழி வாலிபர் கவனத்தில் இருக்கவேண்டியதாகும். ஒவ்வொருதமிழரும் இப்படியான செயற்கரும சாதனைகளைச் செய்துகாட்டினல் தமிழரின் அந்தஸ்தும் புகழும் உயர்ந்து கொண்டே போகும். செயற்கரும் சாதனைகளைப் பொருளாதார விருத்தியில் திருப்பினல் தமிழினம் தன்மானத்துடன் தழைத்தோங்கும்."

திரு. டொமினிக்ஜீவாவும், திரு. ரி. குகதாஸனும், திரு.எஸ். வி. நடராசாவும் ஆனந்தனின் அரும் பெரும் சாதனைகளைப் பாராட்டிப்பேசினர். பாராட்டுப்பத்திரமும் வாசித்து அளிக்கப்பட்டது.

செல்வி தங்கரத்தினம் வேலுப்பிள்ளை இன்னிசை விருந்தளித்தார்.

## 'மக்கள் வங்கி வேண்டும்'

### சுழிபுரம் கிராமசபை தீர்மானம்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்றது. சுழிபுரம் கிராமசபை எல்லைக்குள் இருக்கும் மக்களின் கஷ்டத்தை போக்கும் நோக்குடன் இங்கு ஓர் மக்கள் வங்கிக் கிளையை திறந்து தரும்படி மக்கள் வங்கியோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்வது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரியின் தரத்தை உயர்த்தி, வெளியூர் மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கு ஏற்ற முறையில் விடுதிச்சாலையொன்று அமைப்பதற்கும் ஏற்ற ஒழுங்குகளை செய்து தரும்படி கல்வி மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் ஓர் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. கல்லூரின் சகல தேவைகளையும் தலைவர் விளக்கிக் கூறினர்.

## கட்டுப்பாட்டு ஸ்தாபனம் தீர்மானம்

கொழும்பு, வியாழன்

அரசாங்க ஸ்தானத்தில், லஞ்ச ஊழல் இருப்பதாக பொதுமக்கள் தெரிவிப்பதால் அப்படிப்பட்ட ஊழல்களை ஒழித்து, சங்கத்தின் நற்பெயரைக் காப்பற்ற, ஸ்தாபனங்களின் நிர்வாகத்திற்கு எல்லா வழிகளாலும் உதவியளிக்க தீர்மானித்துள்ளதாக, அரசாங்க சேவையாளர் சங்கத்தின் கிளையாகிய ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு ஸ்தாபனத்தின் கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இதை நடைமுறைக்கு கொண்டுவரும் முகமாக, உடனடியாக தொழிற்சங்க சம அங்கத்தவர்களுடைய ஒரு சபையை ஏற்படுத்தும்படி வேண்டுகோள் விடுத்துள்ளது.


மாமைட் எனக்கும் என் குடும்பத்துக்கும் நற்சுகமும் பெலனும் தருகிறது.



நாம் யாவரும் நன்ருய் சாப்பிடுகிரேம் அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிரேம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒருபாகமாக நீங்கள் மாமைட் தினசரி அருந்திவர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமானல் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல் அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மைமாட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும்பொழுது தேவையான வீட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்.

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் தாய்கறி ஆகாரம்.




மாமைட்

# ஒரே கொடியின்கீழ் எகிப்து, ஈராக், சிரியா

## இணைந்தன
## கெய்ரோதான் தலைநகரம்

கெய்ரோ, ஏப்ரல் 11

எகிப்து, சிரியா, ஈராக் ஆகிய மூன்றும் ஐக்கிய அரபுக் குடியரசு என்ற பெயரில் ஒன்ருக இணைவதென்று தீர்மானித்துள்ளன. மூன்று நாடுகளுக்கும் ஒரே கொடி, ஒரே தலைநகர், ஒரே பிரஜாவுரிமை ஆகியன இருக்கும்.

எகிப்து, சிரியா, ஈராக் ஆகிய மூன்று நாடுகளும் ஒரே கொடியின்கீழ் ஐக்கிய அரபுக் குடியரசு என்ற பெயரில் ஒன்ருக இணைவதென்று தீர்மானித்ததை எகிப்தின் பிரதமர் விங்கமாண்டர் அலிசாப்ரி நேற்று அறிவித்தார்.

கெய்ரோதான் புதிய ஐக்கிய அரபுக் குடியரசின் தலைநகராக இருக்கும். வெளிவிவகாரம், நிதி, பாதுகாப்பு ஆகியவைகளை கெய்ரோவில் உள்ள தலைமைப்பீடம் கவனித்துக்கொள்ளும். விவசாயம், கைத்தொழில் ஆகியவைகளுக்கென திட்டக் குழு ஒன்றும் கல்வி மற்றும் விஷயங்கள் சம்பந்தமாக மற்ருெரு குழுவும் நிறுவப்படும்.

புதிய ஐக்கிய அரபுக் குடியரசின் புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதற்கான கூட்டம் இன்று கெய்ரோவில் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

எகிப்து, சிரியா, ஈராக் ஆகிய மூன்று மாகாணங்களைக் கொண்ட புதிய ஐக்கிய அரபுக் குடியரசின் ஜனத்தொகை மூன்று கோடியே 70 லட்சமாக இருக்கும்.

எகிப்தும் சிரியாவும் 1958-ம் ஆண்டு சமஷ்டியாக ஐக்கிய அரபுக் குடியரசு என்ற பெயரில் இணைந்தன. மூன்று வருடங்களின் பின் சிரியாவில் புரட்சி ஏற்பட்டு ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து சிரியா தனியாகப் பிரிந்துகொண்டது. என்ருலும் எகிப்து ஐக்கிய அரபுக் குடியரசு என்ற பெயரைத் தொடர்ந்து வைத்துக்கொண்டது. சென்ற மாதம் சிரியாவிலும் ஈராக்கிலும் ஏற்பட்ட புரட்சியின் பயனுக இப்பொழுது மூன்று நாடுகளும் ஐக்கிய அரபுக் குடியரசுஎன்ற பெயரில் ஒன்ருக இணைந்துள்ளன.

### அணு சக்தி நீர் மூழ்கியை காணவில்லை

வாஷிங்டன், ஏப். 11

அமெரிக்க அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பலொன்றைக் காணவில்லையென்று அமெரிக்க கடற்படைக் காரியாலயம் அறிவித்துள்ளது. 130 சிப்பந்திகளுடன் சென்ற இந்த அணுசக்தி நீர் மூழ்கிக் கப்பல் பொஸ்டனுக்கு கிழக்கே 220மைல் தூரத்தில் காணுமல் போய்விட்டதாகவும் புதன்கிழமை காலை 9 மணிக்குப் பின்னர் அதனிடமிருந்து தகவல் கிடைக்கவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

### மின்சாரத்துக்கு சகோதரிகள் பலி

காலி, புதன்

11 வயதான சந்திராணி வீரதுங்கா, அவரது சகோதரி 13 வயது சிறுமதி வீரதுங்கா ஆகிய இருவரும் மின்சாரம் தாக்கி மாண்டனர்.

இவர்களுடைய வீட்டுவேலியில் உள்ளமுள்ளுக் கம்பியில் தெருஓரத்திலுள்ள மின்சாரக்கம்பி அறுந்துதொங்கியதால் வேலிக்கம்பியில் மின்சாரம் பாய்ந்திருந்தது. சகோதரிகள் இருவரும் வேலியைக் கடந்து வீட்டுக்குள் செல்ல முயன்றபொழுது மின்சாரம் தாக்குண்டு மாண்டனர்.

### "விஞ்ஞான சொல்வளம் சிங்களத்தில் இல்லை"
### வில்மட்பெரேரா விளக்கம்

ஹொரணை, வியாழன்

"விஞ்ஞானத்தை சிங்களத்தில் போதிப்பதனுல், மாணவர்களுக்கு போதுமான விஞ்ஞான அறிவு ஏற்படாது."

ஹொரணை, குடஉடுவ என்ற இடத்திலுள்ள நாலந்த பிரிவினில் நடைபெற்ற கூட்டமொன்றில் சீனுவில் முன்னர் இலங்கைத் தூதுவராகவிருந்த திரு வில்மட் ஏ. பெரேரா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. வில்மட் பெரேரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "விஞ்ஞானத்தை சிங்களத்தில் போதிக்கவேண்டும் என்று நாட்டில் பலர் அபிப்பிராயம் தெரிவித்துவருகின்றனர். ஆனல் சிலர் எதிர்பார்ப்பதுபோல், விஞ்ஞானத்தை சிங்களத்தில் போதிப்பதன் மூலம் மாணவர்கள் நல்ல பலனைப் பெறமுடியாது. சிங்களத்தில் விஞ்ஞானத்தைப்போதிப்பதனுல், மணவர்கள், தங்களுக்குத் தேவையான விஞ்ஞான அறிவைப் பெறமுடியாது என்றே நான் கருதுகின்றேன்.

விஞ்ஞானத்தை ஆங்கிலத்தில் போதிக்கும்பொழுதுகிடைக்கும் விஞ்ஞான அறிவைப் போன்று, சிங்களத்தில் விஞ்ஞானத்தைப் பயிலும்பொழுது போதிய அறிவு கிடைக்காது. இதனுல் மாணவர்கள் தாங்கள் எதிர்பார்க்கும் விஞ்ஞான அறிவைப் பெற முடியாதென்றே கருதுகின்றேன். விஞ்ஞானத்தை சிங்களத்தில் போதிப்பதற்கு, விஞ்ஞானக் கொள்கைகளை எடுத்து விளக்குவதற்கு சிங்களத்தில் போதிப்பதற்கு, விஞ்ஞானக் கொள்கைகளை எடுத்து விளக்குவதற்கு சிங்களத்தில் போதிய சொல்வளம் இல்லை. விஞ்ஞானத்தைச் சிங்களத்தில் போதிப்பதற்குரிய சரியான காலம் வரும்வரை போதிய சொல்வளம் கிடைக்கும்வரை, விஞ்ஞானத்தை சிங்களத்தில் போதிப்பது புத்திசாலித்தனமன்று.

#### சீனுவை பின்பற்றினுல்

நாட்டின் பொருளாதார நிலைமை இன்னும் திருந்தவில்லை. பொருளாதார நெருக்கடி இங்கு பெருமளவில் ஏற்பட்டிருக்கிறது. இலங்கை அரசாங்கம், சீனுவைப் பின்பற்றினுல், இந்த நாட்டில் தோன்றியுள்ள சில பிரச்னைகள் மறையலாம் என்றே நான் கருதுகின்றேன்.

### மார்க்ஸீய நூல் நிலையம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் முற்போக்கு வாலிபர்சங்கம் மார்க்ஸீய, லெனிஸிய பொதுசன நூல் நிலையம் ஒன்றினை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கிறது. கார்ல்மாக்ஸ் பிறந்த தினமான மே 5-ம் திகதி பொதுசன நூல்நிலையம் திறந்து வைக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

## 144 இந்திய போர்க் கைதிகள் விடுதலை
### மற்றும் 500 பேர் விரைவில் விடுதலை பெறுவர்
### பீக்கிங் ரேடியோ தகவல்

பீக்கிங், ஏப். 11

இந்திய—சீன எல்லைச் சண்டையின்போது சீனர்கள்கைது செய்த இந்திய போர்க் கைதிகளில் 144 பேரை பட்டித்துவாங் என்ற இடத்தில் நேற்று விடுதலை செய்ததாக பீக்கிங் ரேடியோ அறிவித்தது.

இந்தக் கைதிகள் இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தூதுகோஷ்டியிடம் சீன செஞ்சிலுவைச்சங்க தூதுகோஷ்டியினரால் ஒப்படைக்கப்பட்டனரென்று பீக்கிங் ரேடியோதெரிவித்தது.

மேலும் 500 போர்க் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்களென்றும் இவர்களில் 27 பேர் காயமுற்றவர்களும் நோயுற்றவர்களுமென்று சீனு தெரிவித்துள்ளது. 469 கைதிகள் பங்க் கணவாய்க்கு அருகில் இம்மாதம் 15-ந் திகதி விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் 181 பேர் பட்டித்துவாங்கில் இம்மாதம் 17-ந் திகதி விடுதலைசெய்யப்படுவார்களென்றும் அறிவிக்கப்பட்டது. இந்த விபரம் இந்திய செஞ்சிலுவைச் சங்கத்துக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் பீக்கிங் ரேடியோ தெரிவித்தது.

நியூயோர்க், ஏப். 11

இந்திய-சீன எல்லையில் இப்பொழுது சண்டை நடைபெறவில்லையாயினும் இந்தியாவுக்குள்ள ஆபத்து நீங்கவுமில்லை குறையவுமில்லை என்று திருமதி இந்திராகாந்தி இங்கு கூறினர்.

### லாவோஸ் நிலைமை நெருக்கடி
#### கட்டுப்பாட்டுக் கமிஷன் அறிவிப்பு

வியன்டைன், ஏப். 11

மத்தியலாவோஸிலுள்ள ஜார்ஸ் சமவெளிக்குச் சென்றிருந்த சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷன் அங்கத்தவர்கள் நேற்று வியன்டைனுக்குத் திரும்பிவந்தனர். ஜார் சமவெளியில் நிலைமை இன்னும் நெருக்கடி மிகுந்ததாகவே இருக்கிறது என்று கட்டுப்பாட்டுக் கமிஷனின் தலைவர் அவதார்சிங் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டுக் கமிஷன் அங்கத்தவர்கள் ஜார்ஸ் சமவெளியில் நடுநிலைமை ஜெனரலையும் பதட்லாவோ ஜெனரலையும் சந்தித்தனர். இப்பொழுது அங்கு சண்டை ஓய்ந்துள்ளது.

வியன்டைன் திரும்பிய கட்டுப்பாட்டுக் கமிஷனின் அங்கத்தவர்கள் லாவோஸ் பிரதமர் சுவன்னபூமாவையும் உதவிப் பிரதமர் சுவன்னவாங்கையும் சந்தித்துப் பேசினர்.

சர்வதேச கட்டுப்பாட்டுக் கமிஷனின் தலைமை நாடு என்ற முறையில் இந்தியா, லாவோஸில் அமைதிநிலவுவதற்குப் பெரும் முயற்சி செய்து வருகிறது.

### செனிகல் புகார்

நியூயார்க், ஏப். 11

செனிகல் கிராமமொன்றில் போர்ச்சுக்கல் விமானங்கள் அத்துமீறிப் பிரவேசித்துக் குண்டுவீசியதுபற்றி செனிகல் குடியரசு ஐ. நா. வுக்குப் புகார் செய்துள்ளது. போர்ச்சுக்கலின் இச்செயல்பற்றி விவாதிப்பதற்கு பாதுகாப்புச்சபை கூடவிருக்கிறது.

### கப்பல் தொழிலில் அந்நியர் பங்கு

புதுடில்லி, ஏப். 11

இந்திய கப்பல் தொழிலில் அந்நியரின் பங்கை 25 சதவிகிதத்திலிருந்து 40 சத விகிதமாக உயர்த்துவதற்கு அனுமதிப்பதென்று இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

### படைகுறைப்பு மகாநாடு

ஜெனிவா, ஏப். 11

ஜெனிவாவில் நடைபெற்ற 17 நாடுகளின் படைகுறைப்பு மகாநாடு ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் மகாநாடு இடைக்கால அறிக்கையொன்றை அங்கீகரித்தது. இந்த அறிக்கை இம்மாத முடிவில் ஐ. நா. விடம் சமர்ப்பிக்கப்படும்.

### அனுமதி மறுப்பு

குருநாக்கலை, வியாழன்

முஸ்லிம்களுக்கு தனியான பிரேதஅறை ஒன்றை அமைப்பதற்கு அனுமதி தரும்படி குருநாக்கலை மாநகர சபை விடுத்த வேண்டுகோளை சுகாதார அமைச்சு மறுத்துள்ளது.

### "நிதிமந்திரி கலுகல்லை நீரோ மன்னனுக்கு சமம்"
—மொண்டேகுஜயவிக்கிரமா

வெலிகம, வியாழன்

"உரோமாபுரி நகரம் தீயினுல் எரிந்து கொண்டிருக்கும் பொழுது பிடில் வாசித்த நீரோ மன்னர்மாதிரித்தான் நமது நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லை இப்பொழுது இருக்கின்ருர்."

கொகுனுகமுவ என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் வெலிகம எம். பி. மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். இந்தக் கூட்டம் மீறுப்பிகமணதிஸநாயக்கதேரோ தலைமையில் நடைபெற்றது.

திரு. ஜயவிக்கிரமா தொடர்ந்துபேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: "நிதிமந்திரி பதவியிலிருந்து திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ராஜினுமா செய்தபின்னர் திரு. சி. பி. டி' சில்வாவுக்கு நிதிமந்திரிப்பதவியளிக்க இந்த அரசாங்கம் எண்ணியது. பின்னர் திரு. பி. பி. ஜி. கலுகல்லைக்கு இந்த அரசாங்கம் நிதிமந்திரிப் பதவியை அளித்தது. திரு. கலுகல்லை நாட்டில் தோன்றியுள்ள நிதிநெருக்கடியைத் தீர்த்து வைப்பார் என்று அரசாங்கம் கருதியது. ஆனல் அது நிறைவேற்றப்படவில்லை.

நோட்டுக்களை அச்சடிப்பதன் மூலம் நாட்டின் நிதிநெருக்கடியைத் தீர்த்துவைக்கலாம் என்று தற்போதைய நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லை கருதுதுவபோலத் தெரிகிறது.

15 கோடி ரூபாய் பெறுமதியுள்ள கரன்ஸி நோட்டுகளை அச்சடிப்பதற்கு பார்லிமெண்டிலிருந்து திரு. கலுகல்லை அண்மையில் அங்கீகாரம் பெற்றுள்ளார். நாட்டின் நிதிநெருக்கடியைத் தீர்ப்பதற்கு இந்த முறையைக் கையாள்வதுபுத்திசாலித்தனமல்ல. நாட்டின் நிதிநெருக்கடி தொடர்ந்து மாறுதல் எதுவும் ஏற்படாமல் நீடிக்குமானுல் நாட்டில் பொதுத்தேர்தல் நிச்சயம் ஏற்படும். நாட்டின் நிதிநெருக்கடியைத் தீர்ப்பதற்கு தேர்தல் நடைபெற்று நிலையான வலுவுள்ள அரசாங்கம் ஒன்று அமைய வேண்டும்"

### 'பிளேக்'நோய் அபாயம்

புதுடில்லி, ஏப். 11

தமிழ்நாட்டிலும் ஆந்திராவிலும் 'பிளேக்' நோய் பரவக்கூடிய அபாயமிருப்பதால் ராஜ்ய அரசாங்கங்கள் உடனடியாக நோய்தடுப்பு மருந்துகள் தெளிக்கும் நடவடிக்கைகளைக் கூட்டாக மேற்கொள்ளவேண்டுமென்று ராஜ்ய சுகாதார மந்திரிகளின் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

### மணி வாக்கு

'பிதாவே! இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள். உம்முடைய கைகளில் என் ஆவியையொப்புவிக்கிறேன்.'
—சிலுவையில் இயேசுநாதர்

ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 30 உ. (12-4-63)

## பொலிஸ்–பொதுமக்கள் உறவுகள்

பொலிசுக்கும் பொதுமக்களுக்கும் இப்போதுள்ள உறவுகளை மேம்படுத்த வேண்டிய பிரச்னையைப்பற்றி, பொலிஸ் தலைமைக் காரியாலயத்தார் அவசர விஷயமாக ஆலோசனை செய்து வருவதாக ஒரு கொழும்புச்செய்தி கூறுகிறது. இது வரவேற்கத்தக்கதாகும். புதிய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், சமீபத்தில் பதவி ஏற்கும்போது இவ்வுறவுகளை மேம்படுத்த வேண்டிய அவசியத்தை பொலிஸ் அதிகாரிகளுக்குச் சரியாக வற்புறுத்தினர்.

இவ்விஷயமாக நாம் இப்பத்தியில் ஏற்கெனவே எழுதியுள்ளோம். இன்று பொதுவாக பொலிஸாரிடம் பொதுமக்களுக்கு நம்பிக்கையோ, அபிமானமோ இல்லை. இது பகிரங்க ரகசியம். இதற்குக் காரணமென்ன? இதுபற்றி கமிஷன் நியமித்து விசாரணை நடத்த வேண்டும். அப்போதுதான் உண்மை வெளியாவதுடன், இப்போதுள்ள அவல நிலையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியும். சென்ற சில வருடங்களாக அடுத்தடுத்து 'அவசரகாலங்கள்' பிரகடனம் செய்யப்பட்டு, அது இப்போது தொடர்ந்து வருடக்கணக்காகவும் நீடிக்கப்படுகிறது. இந்த அவசரகாலத்திலே பொலிசுக்கு விசேஷ அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதுகாரணமாக பொலிஸ்படையினரில் சிலர், இந்த அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்யவும், இதனால் பொதுமக்களின் நல்லெண்ணத்தைப் பொலிஸார் இழக்கவும் நேரிடுகின்றது. இப்போது அவசரகாலத்தை நீடிக்க எவ்வித காரணமுமில்லை. இதை உடனடியாக முடிவுக்குக் கொணர்ந்தால் பொலிஸ்-பொதுஜன நல்லுறவுகள் மேம்பட அது உதவியான சூழ்நிலையை ஏற்படுத்துவதாக இருக்கும்.

சென்ற வருடத்திலே இலங்கைப் பொலிசுக்கு மாறாகப் பொது மக்களால் மொத்தம் 1119 புகார்கள் செய்யப்பட்டனவாம். இதில் பெரும்பாலான புகார்களும் விசாரணைக்குப் பின் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகப் பொலிஸ் அதிபரின் சென்ற வருட நிர்வாக அறிக்கை தெரிவிக்கின்றது. சாதாரணமாக பொலிசுக்கு விரோதமாக பொதுமக்களில் யாரும் புகார் செய்யத் துணியமாட்டார்கள். புகார் செய்வதாயின் அதில் ஏதாவது உண்மை அநேகமாக இருக்கத்தான் செய்யும். என்றாலும் பெரும்பாலான புகார்களும் விசாரணை சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ளன. காரணமென்ன?

விசாரணை சபைகளிலே பொலிஸ் அதிகாரிகளும் பொதுமக்களின் பிரதிநிதிகளும் இருக்கின்றனர். பொலிஸுக்கு மாறான புகார்களைப் பற்றிப் பொலிசாரே விசாரணை செய்வது திருப்தியான ஏற்பாடல்லவென்று பார்லிமெண்ட் மெம்பர்களில் பலர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். பொலிஸ் மீது பொதுமக்கள் செய்யும் புகார்கள், பாரபட்சமற்ற நீதிபதியினால் பரிசீலனை செய்யப்படவேண்டும். அப்போதுதான் உண்மை வெளியாவதுடன், பொதுமக்களுக்கும் விசாரணையில் நம்பிக்கை ஏற்படும்; பொலிஸாருக்கும் பயமிருக்கும். இந்த விசாரணை முறையைத் திருப்திகரமாக மாற்றி அமைப்பது பற்றிச் சீக்கிரத்தில் ஒரு முடிவு செய்யப்படுமென்று கூறப்படுகிறது. அப்படிச் செய்வதால் நிலைமை சற்றே மேம்பட உதவக்கூடும்.

சந்தேக நபர்களைப் பொலிஸ் ஸ்டேஷன்களில் கொண்டு சென்று மிருகத்தனமாக அடித்து உதைப்பதாகவும் பலத்த புகாருண்டு. தெருக்களில் வைத்துக்கூட, சில பொலிசார் சிலரைத் தாக்குகின்றனராம். இது அத்துமீறிய செயலாகும். இதனால் பொதுமக்களின் அபிமானத்தையோ, நம்பிக்கையையோ பொலிசார் பெற முடியாது. ஒருவரது குற்றம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படும்வரை, அவரை நிரபராதி என்றே கருதவேண்டுமென்பது சட்டம். அப்படியிருக்க, பொலிசாரே, சந்தேக நபர்களை அடித்து இம்சிப்பது உண்மையாயின், அது சட்டவிரோதமான செயலேயாகும். இதைப்பற்றியும், புதிய பொலிஸ் அதிபர் கவனித்து, கண்டிப்பான உத்தர விடுவது, பொதுமக்களுக்குப் பெரிய கஷ்ட நிவாரணமாவதுடன், பொலிஸ்-பொதுமக்கள் உறவுகள் மேம்படவும் வழி பிறக்கும்.

---

### இன்று பெரிய வெள்ளிக்கிழமை

# "உலகம் முடியும்மட்டும் உங்களோடு இருப்பேன்"

(ஆசீர்வாதம் ஹென்றி)

நாற்பது நாட்கள்...... ஒளிக்கும் இருளுக்கும், வாழ்விற்கும் சாவிற்கும், பிசாசிற்கும், அறத்திற்கும் மறத்திற்கும், கிறஸ்துவ வாழ்க்கைக்கும் பாவம் மலிந்த வாழ்க்கைக்குமிடையே நடக்கும் மாபெரும் போராட்டத்தின் காலம் பெரிய வெள்ளியன்று நடந்த அவல நிகழ்ச்சி.

உலக வரலாற்றிலே, உலகிற்காக உயிரைக்கொடுத்த உத்தமர் உலக ரட்சகராகிய கிறிஸ்து பெருமான். பிதாப் பிதாக்களும், தீர்க்க தரிசிகளும் ஏனைய பக்திமான்களும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக எதிர்நோக்கியிருந்த "மேசியாஸ்" எனப்படும் இரட்சா பெருமான் அவர் தாமன்றோ?

இஃது அகில உலகம் ஒப்புக்கொண்டதோர் உண்மை. வாழ்க்கைச் சுகபோகங்களின் சுழல் காற்றினிலே அள்ளுண்டு சூழ்ந்து அக்கிரமங்களின் மேல் அக்கிரமங்களைப் புரிந்து அழிந்தொழிந்து உலகம் கெட்டுப்போன இந்த மக்கட் சமுதாயத்தினை, அளப்பெரும் அன்பும் கருணையும் வல்லபமும் வாய்ந்த ஆண்டவன் தாமே ஆட்கொண்டு மீட்டிரட்சிக்க வேண்டியதாயிற்று.

பரிபூர்ண பரிசுத்தராகிய ஆண்டவருக்கு மாறாக மக்கட் சமுதாயம் புரிந்துகொண்ட அக்கிரமங்களின் கனத்துவமும் எல்லையிறந்ததுவே. எல்லையிறந்ததோர் சாபத்தீட்டிற்கு எல்லை கடந்ததோர் பரிகாரமும் வேண்டப்படுவது நீதியும் இன்றியமையாததுமன்றோ? எனவே வரம்பிகந்த வல்லபம் படைத்த பரம்பொருளாகிய ஒருவரே மனித அவதாரம் தாங்கி மண்ணுலகிற்போந்து இத்தகு பரிகரிக்கும் பணியினை மேற்கொள்வது அவசியமாயிற்று. இஃது தேவசாஸ்திர விற்பனர் கண்ட முடிவு. இது காரணமாகவே, பிதா, சுதன், தூய ஆவி என்னும் பரிசுத்த பரம திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய சுதன் தாமே மனுவுருத்தாங்கி மனுக்குலத்தை மீட்கச் சித்தமாயினர். இதுவே அவரது மனு அவதாரத்தின் இலட்சியமுமாயிற்றென்க.

தேவகுமாரரின் போதனைகளைக் கேட்டும் அற்புதங்களைக் கண்டும் அவரை ஆண்டவர் என்று புரிந்துகொண்டார்கள் சாதாரண மக்கள். ஆயினும் அதிகாரிகளும், வேதபோதகர்களும் அவரில் காய்மகாரங்கொண்டனர் அவர் மேல் பொல்லாத பழிகளைச் சுமத்தினர். தன்னை "இராசா" என்கின்றான் என்றனர். புதிய போதனைகளைப் புகுத்தித் தங்கள் மதசாதனைகளையெல்லாம் பேதப்படுத்துகிறான் என்றார்கள். கொடிய யூதர் எங்கள் அக்கிரமங்களைத் துடைத்து எம்மை ஈடேற்ற அவதரித்த கருணாநாதனாகிய யேசுபெருமான் யூதர் கையில் அகப்பட்டார்; ஏரோதன், பிலாத்தன் கைபபாஸ் என்னும் அரசர்களின் முன் நிறுத்தப்பட்டார்.

எமது யேசுபெருமான் உலக மக்களை இரட்சிக்க, அக்கொடிய அரக்கர்கள் தமது மனதுகளை எம்பெருமான் யேசுமட்டில் கல்லாக்கிக்கொண்டு கற்றூணில் சட்டி அடித்தார்கள். தங்கக் கிரீடம் சூட்டப்படவேண்டிய அவரது சிரசில் கூரிய முள்முடி சூட்டப்பட்டது. மனுக்குலத்தின் பாவ மூடைகளைத் தம் தலையில் சுமந்துகொண்டார் இராசாதி இராசன். கனத்த சிலுவை அவர் தோள்மீது சுமத்தப்பட்டது. சிலுவையின் பாரத்தால் அவர் மும்முறை முகம் குப்புற நிலத்தில் வீழ்ந்தார். மரணம்மட்டும்நம்மை நேசித்த யேசு இரு கள்வர்களுக்கு மத்தியில் தமது பிதாவின் இறுதிக் கட்டத்தை நிறைவேற்ற ஆயத்தமானார். தன் ஆத்மத்தை பிதாவிடம் ஒப்படைத்து குருதி வெள்ளத்தில் தலை சாய்ந்து உயிர்விட்டார். இன்று பெரிய வெள்ளிக்கிழமை.

அன்று ஏற்பட்ட இருள் மீண்டும் அவர் வருகையை எதிர்நோக்கியது. மரித்த மூன்றும் நாட்காலையில் கீழ் வானில் ஒளி எயழத்தொடங்கியது. 'உலகின் வெளிச்சமும் வழியும் நானே' என்னும் தமது கூற்றை மெய்ப்பிப்பது போல் தம் சர்வ வல்லமையுடன் உயிர்த்தெழுந்தார். அவரது உத்தானத்தால் இப்புவி புநிதுயி பெற்றது. 'உலகம் முடியும் மட்டும் உங்களோடு நானிருப்பேன்' என்னும் அவரது தெய்வக் கூற்று வெள்ளிடை மலையாயிற்று.

இந்த வெற்றி விழாவை நமது தாயாகிய திருச்சபை பெருநாளாக, திருநாளாகக் கொண்டாடுகிறது. இவ்வேளையில் 'மூவுலக ராஜேசுவரன் முடிவில்லா ஆதிநாதன் சாவினின்று உயிர்த்தெழுந்தார் அல்லேலூயா' என்னும் இன்ப வெள்ளோட்டம் நமது கத்தோலிக்க உள்ளங்களில், இல்லங்களில் பய்ந்து செழிக்கட்டும்.

---

## பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம்

கொழும்பு, வியாழன்

பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தின் கீழ் மொத்தம் 200,000 ஏக்கர் நிலம், 1963-64 வருடத்தில் பயிர்ச் செய்கைக்கு கொண்டுவரப்படுமென்று வேளாண்மை சேவை ஸ்தாபனத்திலிருந்து தெரியவருகிறது.

தற்பொழுது இத்திட்டத்தின் படி 65,000 ஏக்கர் மட்டும் செயல் படுத்தப்படுகிறது. 1961-62 ஆண்டின் முழுநிலத்தின் விஸ்தீரணம் 25,000 ஏக்கர்.

இத்திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட பணத்தின் விபரம் பின்வருமாறு:-

1959 60: ரூபா 17,602. 1960-61: ரூபா 31,165. 1961-62: ரூபா 75,812. 1962-63: (பங்குனி வரை) ரூபா 47,016. மொத்தத்தொகை 195,995. இந்த ஸ்தாபனத்தினால் பயிர்ச் செய்கையில் ஏற்பட்ட நஷ்டத்திற்காக ரூபா 125,886 செலவிடப்பட்டுள்ளது.

---

## பத்திரிகை காகித உற்பத்தி

கொழும்பு, வியாழன்

இலங்கையில் பத்திரிகைக் காகிதம் உற்பத்திசெய்யும் சாத்தியம் பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த இரண்டு நிபுணர்கள் இப்பொழுது இலங்கையில் இதுபற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

---

## மாட்டுப்பண்ணை நிறுவ தீர்மானம்

கொழும்பு, வியாழன்

கமத்தொழில் உதவி அதிகாரியின் அறிக்கையைத்தொடர்ந்து, உடனடியாக 200 பசுக்கள்கொண்ட ஓர் மாட்டுப் பண்ணையைநிறுவ, நீர்ப்பாசன அமைச்சின் விசேஷ சபை தீர்மானித்துள்ளது.

அம்பாவல பண்ணையின் அருகே இந்த மாட்டுப்பண்ணை ஆரம்பிக்கப்படும். கமத்தொழில் பகுதி, பால்சபை, கூட்டுறவு ஸ்தாபனம் ஆகிய அரசாங்க ஸ்தாபனங்கள், தேவையான ஆலோசனைகளைத் தெரிவிக்கும்.

கமத்தொழில்பகுதி கட்டிடங்கள் கட்டி, அவற்றை கூட்டுறவு ஸ்தாபனத்தின் மூலமாக, பசுக்கள் வாங்க கடனுதவி பெறும் குடியேற்றக்காரர்களுக்கு, வாடகைக்கு கொடுக்கும்.

200 ஏக்கர் பயிர்நிலத்தை இத்திட்டத்திற்கு உதவியளிக்குமுகமாக, இந்த ஸ்தாபனம் ஏற்படுத்தும்.

---

### ஐயாறன் எழுதுவது

நேற்று யாழ்ப்பாணமே கிடுகிடுத்துவிட்டது. படார்–படார் பட பட பட பட என்றுபலமணி நேரம் கோடை இடிமுழக்கத்துடனே வருணன் பயமுறுத்திவிட்டான். எந்தச்சமயம் நம் தலையில் இடிவிழுகிறதோ விதி முடிகிறதோ என்று பலரும் பயப்படும்படி இருந்தது. காலை 10 மணிக்குப் பிடித்த மழை பலமணிநேரம் விடவில்லை.

இடியால் அப்படி ஏதும் ஏற்பட்டுவிட்டால் அதிலிருந்து நாம் எப்படித் தப்பமுடியும்? மனிதனின் சக்திக்கு மீறி, ஒரு பெரிய சக்தி இருக்கிறதென்றும், அதிலிருந்து நாம் நமது சாமர்த்தியத்தால் தப்பித்துக் கொள்ள முடியாதென்றும் இடித்து இடித்து இயற்கை நமக்குப் பன்முறையும் அறிவுறுத்துவதுபோல் இருந்தது அந்த இடிகள்.

நேற்றுத்தான் வெயில் தாங்க முடியவில்லை என்று எழுதினேன். இடி மழை பற்றி இன்று புகார் எழுதுகிறேன். நினைத்தாலே வேடிக்கையாக இருக்கிறது. நாளை எப்படியோ! இந்த ஆபத்துகளுக்கெல்லாம் தப்பி நாம் உயிருடன் இருப்பது பெரிய ஆச்சரியமல்லவா?

* * *

வல்வெட்டித்துறையைச்சேர்ந்த ஓர் அன்பர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில், பிரசித்தி பெற்ற சந்நிதி முருகன் ஆலய வீதிகள் கரடுமுரடாக இருப்பதாயும், உண்டியலில் சேரும் பணத்தில் அரைவாசியை எடுத்து ஏன் இவ்வீதிகளைச் சீர் செய்யப்படாதென்றும் கேட்கின்றார்.

அங்குமட்டுமல்ல. பல கோவில் வீதிகளும்கூட இப்படித்தான் உள்ளன. சில கோவில்வீதிகளில் நெரிஞ்சி முள் குத்தும். அப்பர் சுவாமிகள் இங்கு இருந்தால் இக்கோவில் வீதிகளைத் தம் உழவாரப் பணிகொண்டு, தாமே சீர்செய்திருப்பார். அவரது குருபூசை இம்மாதம் 20-ந் திகதி சனிக்கிழமை வருகிறது.

மானிப்பாய் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தார் இம்முறை அப்பர்சுவாமிகள் குருபூசையை, அங்கு வீதிகளைச் சுத்தம்செய்யும் தொண்டுடன் நடத்த உத்தேசித்திருப்பதாக ஓர் அன்பர் வந்து தெரிவித்தார். பலே! இதைவிட மேலான முறையில் இக்குருபூசையை நடத்தமுடியாது.

பலஊர்களிலும் பலகோவில்களிலும் மக்கள் இந்த முன்மாதிரியைப் பின்பற்றுவதாயின, உழவாரப் பணியைச் செய்ய முன்வருவதாயின், கோவில் வீதிகள் எல்லாம் எவ்வளவோ மேலாக சுத்தமாக இருக்கும். பல பல நாயன்மார்களும் சமூகத்துக்குப் பலபல தொண்டுகள் செய்திருக்கிறார்கள். அவர்களது குருபூசைகளையும், அதேதொண்டுகளைச் செய்வதின் மூலம் கொண்டாடுவதாயின், சமூகத்துக்கு எவ்வளவோ நன்மையாக இருக்கும். குறையிலாது உயிர்கள் வாழ வழி பிறக்கலாம். சைவஸ்தாபன நிர்வாகிகள் இதுபற்றிச் சிந்தித்து ஆவன செய்யவேண்டுமென்றே இதை இங்கு எழுதுகிறேன்.

* * *

சுழிபுரத்தில் 'நடமாடும் சினிமா' பற்றி ஓர் அன்பர் எழுதியிருந்த புகார்கள் ஆதாரமற்றதென்றும், அப்படி அங்கு ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டிருப்பின் கள்ளுவிலை குறைந்திருப்பது காரணமாக இருக்கலாமென்றும் அதே ஊரைச் சேர்ந்த 'குயினி' என்பவர் தெரிவிக்கின்றார்.

* * *

பிறப்போடிறப்பென்று மில்லாதான்காண் பெண்ணுருவோடாணுருவம் ஆயினான்

(5-ம பக்கம் பார்க்க)

# "காந்திஜி சொன்னபடிதான் நாங்கள் போராடுகிறோம்"

—உடுவில் எம். பி.

# சத்தியாக்கிரக நிதி வீணாகவில்லை

—திரு. அமிர்தலிங்கம்

மாவிட்டபுரம், வியாழன்

"இலங்கைத் தமிழர்களின் நிலையை உணர்ந்து 40 வருடங்களுக்கு முன் காந்தியடிகள் கூறிய பாதையிலேயே தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கு தமிழரசுக் கட்சி போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறது."

இவ்வாறு உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் நேற்று மாலை சுன்னாகத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

'எல்லாம் தமிழ் இயக்கத்தையொட்டி நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திரு. தர்மலிங்கம் மேலும் கூறியதாவது:

1922-ம் ஆண்டில் இலங்கைக்குக் காந்தியடிகள் வந்திருந்தபோது தமிழ் வாலிப இயக்கத் தலைவர்கள் அவரைச் சந்தித்து தமிழ் பேசும் மக்கள் இலங்கை சுதந்திரப் போராட்டத்தில் பங்குபற்றிவது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு காந்திஜி, ஏன் நீங்கள் இப்படிக் கேட்கிறீர்கள்? என்றும் உங்களுக்கு சுதந்திரத்தில் நம்பிக்கையில்லையா என்று கேட்டார். அதற்கு தலைவர்கள் "நாங்கள் ஒத்துழைத்துச் சுதந்திரம் பெற்றபின் தமிழர்களைப் பெரும்பான்மையினராகிய சிங்களவர் நசுக்கினால் என்ன செய்வது. என்பதற்காகத்தான் இப்படிக் கேட்கிறோம்" என்றார்கள். அதற்கு காந்திஜி 'நீங்கள் கட்டாயமாக சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பற்ற வேண்டும். அதுவும் அகிம்சைப் போராட்டமாகவே இருக்க வேண்டும். சுதந்திரம் கிடைத்தபின் பெரும்பான்மையினராகிய சிங்கள மக்கள் உங்களை நசுக்கினால் அதே அகிம்சை ஆயுதத்தை சிங்கள மக்களுக்கு எதிராகப் பாவித்து உங்கள் உரிமைகளைப் பெறுங்கள்" என்றார். எனவே தமிழரசுக் கட்சியினர் இழந்த உரிமைகளைப் பெற அகிமசைப் போரட்டம் வேண்டும் என்று காந்தியடிகள் கூறியபடியே செய்துவருகிறது.

எமது இழந்த உரிமைகளை போராட்டத்தின் மூலம்தான் பெறலாமேயொழிய வேறு எந்த குறுக்கு. வழியினாலும் பெறமுடியாது. முன்னர் இந்த அரசாங்கமும் தற்போது இருக்கும் அரசாங்கமும் நமது உரிமைகளை அளிக்கவில்லை. வருங்காலத்தில் வேறு ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழ்ப் பேசும் மக்கள் இழந்த உரிமைகளைப் பெறுவார்களோ என்றால் அதுவும் சந்தேகமே! ஐக்கியதேசிய கட்சியையும் சுதந்திரக் கட்சியையும் விட வேறு ஒருகட்சி பதவிக்குவர முடியுமானால் அது இடதுசாரி ஐக்கிய முன்னணியாகத்தான் இருக்க முடியும் அக்கட்சி பதவிக்கு வந்தால் உரிமைகள் கிடைக்குமோ என்றாலும் அதுவும் இல்லை. அதன் தலைவராக இருக்கும் பிலிப்குணவர்த்தன எப்போதும் தமிழர்களை குழிதோண்டத்தான் பார்ப்பார். அண்மையில் ஆங்கிலப்பத்திரிகையில் திரு. திசாவிஜரத்தின எழுதியுள்ள ஒரு கட்டுரையிலிருந்து தமிழ்மக்களுக்கு எதுவுமே கிடைக்கும் என்பது சந்தேகம்தான்!

நாம் மீண்டும் தமிழ்ப் போராட்டத்தின் முதற் படியில் நிற்கின்றோம். தமிழ்பேசும மக்கள் இழந்த உரிமைகளைப் பெற ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது. அதுதான் சத்தியாக்கிரகம். 1961-ம் ஆண்டுக்குபின் அரசியலில் தமிழ்ப்பேசும் மக்கள் சோர்வுற்றுக் காணப்படுகிறார்கள், இதனால் தமிழர் இனி போராட்டங்களில் ஈடுபடமாட்டார்கள் என்பதல்ல. இந்தியாவிலும் காங்கிரசின் போராட்டங்களிடையே சேர்வு காணப்பட்டது. ஆனால் புதுப்புதுப் போராட்டங்கள் வர வர மக்கள் முன்னிலும் கூடுதலாக பங்குபற்றினர். அதுபோல சோர்வுற்றிருக்கும் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பத்தான் 'எல்லாம் தமிழ் இயக்கம்' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த இயக்கம் சோர்வுற்றிருக்கும் மக்களைத் தட்டி எழுப்பி நேரடி நடவடிக்கையிலும் ஈடுபடச் செய்துவிடும்.

## ஆங்கிலம் அவசியம்

திரு. ஜெயக்கொடி பேசுகையில் கூறியதாவது:-

"இன்று சுதந்திரம் பெறுவிட்டாலும் வருங்கால சமூகத்தினராவது சுதந்திரமாக வாழ்வதற்கு நாங்கள் போராட வேண்டும். சட்டத்திலும் சமூகத்திலும் சமத்துவம் பெறலாம் ஆனால் அவை நடைமுறையில் வரா. நாங்கள் எல்லாம் தமிழியக்கத்தில் முழுமூச்சாக ஈடுபட்டால் இழந்த உரிமைகளைப் பெறுவதுடன் நிலையாக அந்த உரிமைகளையும் அனுபவிக்கலாம். நாம் ஆங்கிலத்தை ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது. ஆங்கிலம் விஞ்ஞான முன்னேற்றத்துக்கு முழுக்க முழுக்க அவசியம். அது மாத்திரமல்ல நாம் வெளிநாடுகளில் உத்தியோகம் பெறுவதானால் ஆங்கிலம் அவசியம்.

முற்காலத்தில் சிங்களவர் ஆங்கிலம் தான் நாகரிகம், சிங்களம் கர்நாடகம் என்ற நிலையில் இருந்தார்கள். ஆனால் சுதந்திரமடைந்த பின் ஆங்கிலம்தான் கர்நாடகம் சிங்களம் தான் நாகரிகம் என்ற நிலைக்கு வந்துள்ளார்கள். அந்த நிலை நம்மிடையிலும் வரவேண்டும். இன்று தமிழ்பேசும் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமானோர் சிங்களவராக இருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றவேண்டுமானால் நாம் பொலிஸ் நிலையத்தில் பதியும வாக்குமூலத்தை தமிழில் பதியும்படி பொலிசாரை வற்புறுத்த வேண்டும். அப்படிப் பதிவு செய்யப்படும் பட்சத்தில் தமிழர்களுக்கு உத்தியோகம் கிடைக்காவிட்டாலும் சிங்களவர் தமிழாவது கற்கவேண்டி ஏற்படும். மேலும் தமிழில் வாக்குமூலம் பதியப்படுமானால் நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் முதல் வாக்குமூலமும் தமிழிலேயே எடுத்துச் செல்லப்படும். எமது பகுதி வழக்கொன்று சிங்களப் பகுதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டால் அங்கும் இந்த தமிழ் வாக்குமூலமே எடுக்கப்படும்.

## வழக்குகளின் நிபந்தனை

நீங்கள் உங்கள் வழக்குகளை பேசுவதற்காக வழக்கறிஞர்களை நியமிக்கும்போது ஒரு நிபந்தனையுடன் அவர்களை ஏற்படுத்துங்கள். அதாவது சாட்சிகளை தமிழில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுமெனக் கேட்க வேண்டும் தமிழில் குறுக்குவிசாரணை செய்ய அரசாங்க நீதிபதிகள் அனுமதி கொடுக்கும் போது அதை ஏன் நாம் பயன்படுத்தக் கூடாது. தமிழில் குறுக்கு விசாரணைசெய்ய வழக்கறிஞர்கள் மறுத்தால் அவர்களை நீங்கள் பகிஷ்கரியுங்கள். நேற்றைய "ஈழநாடு" பத்திரிகையில் எமது தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூட இரணைதீவு கொலைவழக்கில் தமிழில் குறுக்குவிசாரணை செய்ததாக கூறப்பட்டிருக்கின்றது. இதிலிருந்து எவ்வளவு தூரம் எமது இயக்கம் முன்னேறி வருகிறது என்பதை மக்கள் நன்கு உணரமுடியும்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

"அரசியல் ஒரு அழுக்கு நிறைந்த ஆட்டம் என்ற நிலை மாறி உயிர்ப்போராட்டம் என்ற நிலை வருகிறது. தமிழியக்கம் ஆஙகிலத்துக்கும் சிங்களத்துக்கும் மாறானதல்ல. தமிழியக்கம் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல. அது தமிழ் பேசும் அனைவருக்கும் சொந்தமானது. சிங்களவர்கள் சுதந்திரத்திற்கு பின் எல்லாக் கருமங்களையும் சிங்களத்தில் செய்கிறார்கள். அதுபோலத் தமிழர்களும் செய்ய வேண்டும் தமிழரசுக கட்சிப் போராட்டம் ஆரம்பிக்கத்தான் அரசாங்கமும் பேச்சுவார்த்தைக்கு ஆயத்தம் செய்கிறது. தமிழரசுக்கட்சி கொஞ்சம் சோர்வுற்றால் அரசாங்கமும் பேச்சுவார்த்தைக்கு ஆயுத்தம்செய்கிறது. தமிழரசுக் கட்சி கொஞ்சம் சோர்வுற்றால் அரசாங்கமும் நித்திரை கொள்கிறது.

பேச்சுவார்த்தையால் பெறுகின்ற உரிமைகள் ஒரு நாளும் நிலைக்கமாட்டா. 1944-ம் ஆண்டு அரசாங்க சபையில் சட்டமூலம் இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளிககப்பட்டது. இச்சட்டம் வெறும் ஒத்துழைப்பினால்தான் நிறைவேற்றப்பட்டது. நமது ஒத்துழைப்புத் தேவையில்லையென்றதும் 1956-ம் ஆண்டு அந்தச் சட்டத்தை நீக்கிவிட்டார்கள். போராட்டத்தினால் பெறும் உரிமையே என்றும் நிலைத்திருக்க முடியும். அதை மாற்றுவதானால் திரும்பவும் போராட்டம் வருமென்ற அச்சத்தினால் அதை மாற்றப் பயன்படுவார்கள்.

## பண்டா-செல்வா ஒப்பந்தம்

பேச்சுவார்த்தை நடத்த இரண்டு வழிகளுண்டு. ஒன்று வட்டமேசை மாநாடு. இதை இதுவரை அரசாங்கமே ஏற்கவில்லை. மற்றது தமிழரின் பெரும்பான்மைக் கட்சியான தமிழரசுக் கட்சியை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவது. இதைத்தான் பண்டாரநாயக்கா 1957-ம் ஆண்டு செய்து காட்டினார். திரு. பண்டாரநாயக்காவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுவதாகக் கூறும் சிறிமாவோ இன்று பண்டாரநாயக்கா காட்டிய வழியில் தமிழரசுக் கட்சியைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்கு மறுக்கிறார். (திரு. பண்டாரநாயக்கா இன்று இருந்திருந்தால் பண்டா-செல்வா ஒப்பந்தம் அமுலுக்கு வந்திருக்கும். அந்த ஒபபந்ததைக் கிழிப்பித்தது ஐக்கியதேசியக் கட்சியினர் அல்ல. புத்த பிக்குகள் சிலரும் அரசகரும மொழிக்கிளைக்களத்திலுள்ள சில தீவிரவாதிகளும் தான். திரு.பண்டாரநாயக்கா, தான் விட்ட தவறை உணர்ந்து அதை நிவிர்த்தி செய்யும் பொருட்டு இராஜரத்தின, எஸ். டி. பண்டாரநாயக்கா போன்றவர்களை அடக்கி புத்த பிக்குகள்மீது நடவடிக்கை எடுக்கவிருந்த நேரத்தில் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டார். பண்டாரநாயக்காவின் முயற்சி வெற்றிபெற்றிருந்தால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு இலங்கை இன்று முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கும்.

திரு. வ. ந. நவரத்தினம் பேசுகையில் கூறியதாவது:-

எமது நாட்டில் எமது மொழிக்கு அந்தஸ்து கொடுப்பதானல் எம்மால்தான் முடியும். அதுபோல அழிக்கவும் எங்களால்தான் முடியும். மற்றவர்களால் முடியாது. தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பதற்காக இன்று உடுவில் கோஷ்டியினருக்கும் சாவகச்சேரி கோஷ்டியினருக்கும் இடையே நடைபெற விருந்த கைப்பந்தாட்டப் போட்டி ரத்துச் செய்யப்பட்டன. காரணம் கைப்பந்தாட்டப் போட்டி உச்சநிலையில் இருக்கும் போது வாயில் வரும் ஆங்கிலச் சொற்களுக்கு சரியான தமிழ்ப் பதங்கள் இல்லாததே!

## சத்தியாக்கிரக நிதி

திரு அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

சத்தியாக்கிரகத்தின் போது தமிழரசுக்கட்சி திரட்டிய பணம் எங்கே என்று சிலர் கேட்கின்றனர். சத்தியாக்கிரகத்தின் போது திரட்டப்பட்டபணம் செலவு போக மீதி தந்தை செல்வாவின் பொறுப்பில் உள்ளது. செலவு வரவு விபரங்கள் முழுவதும் நிர்வாகசபை முன் சமர்ப்பிக்கப்படுகின்றன. கணக்கு விபரம் கணக்குப் பரிசோதகர் மூலம் பரிசோதிக்கப்படுகிறது. இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் தாம் கொடுத்த பணம் வீண் வழிகளில் உபயோகிக்கப்படுகிறது என்று அஞ்சத் தேவையில்லை. கட்சியின் வரவு செலவு விபரம் வெளியிடுவது நல்லதல்ல. கம்யூனிஸ்ட் கட்சியினர் தமக்குக்கிடைக்கும் பணஉதவி எவ்வளவு என்று கூறுவார்களா? இன்றுள்ள நிலையில் அரசியல் கட்சிகளும் வருமானவரி கட்டவேண்டிய நிலைக்கு வரலாம். எனவே கட்சியின நிதி எவ்வளவு என வெளியிடுவது உசிதமல்ல!

திரு. பிரான்சிஸ் பெரேரா திரு செல்வநாயகம், திரு. கதிரவேற்பிள்ளை மற்றும் பலரும் பேசினர்.

---

# சிங்களத்தில் விஞ்ஞானம்

## "அதிகமான புத்தகங்கள் வெளியாக வேண்டும்"

—திரு. குலரத்ன

கொழும்பு, வியாழன்

"சிங்களத்தில் வெளியாகும் விஞ்ஞான புத்தகங்களை அதிகரிப்பதற்கு பல்கலைக் கழக நிர்வாகத்தினர், விரிவுரையாளரின் உதவிகளை பெற்றுள்ளனர். ஒவ்வொரு விஞ்ஞான பகுதியிலும் சிங்களத்தில் விரிவுரை நடத்துவதற்கு குறைந்தது ஒரு விரிவுரையாளரை ஏற்படுத்த, தேவையான பண உதவியைக் கேட்டுள்ளார்கள்.

ஆசிரியர்களும், புத்தகங்களும், குறைவாக இருக்கும் காரணத்தால், உடனடியாக விஞ்ஞானத்தை சிங்களத்தில் போதிக்க முடியாமலிருப்பதாக பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், கல்வி மந்திரிக்கு அறிவித்ததற்கு பதிலளிக்கும் முகமாக, அம்பலாங்கொட எம். பி., திரு. பீ. டீ. எஸ். குலரத்தின மேற்படி கருத்தை கூறினார்.

திரு. குலரத்ன தொடர்ந்து கூறியதாவது: "1956 ஆண்டு சிங்களம் அரசாங்க மொழியாக்கப்படுவதற்கு முன்பும், சிங்கள மாணவர்கள், பாடசாலைகளில், தங்கள் தாய் மொழியிலேயே கல்வி பயின்று வந்தனர். அந்த நேரத்திலே அரசாங்க கொள்கைப்படி எப்படி கடமையாற்ற முடியுமென்று பல்கலைக் கழக நிர்வாகத்தினர் யோசித்திருக்க வேண்டும்.

பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், தங்கள் சொற்பொழிவுகளைக் கொண்ட புத்தகங்களை வெளியிட்டிருந்தால்; கேள்வித் தாள்களை சிங்களத்தில் வெளியிட்டிருப்பதோடு, இன்னும் சில ஆண்டுகளின் பின்பு, பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத்தை சிங்களத்தில் போதிக்கவும் வசதி இருந்திருக்கும். இவ்வருடம் நடத்திய விரிவுரையை அடுத்த வருடம் நடத்தமுடியாதவகையில், விஞ்ஞானம் முன்னேறிவிட்டதென்பதை நான் ஏற்றுக்கொள்ள வில்லை.

விஞ்ஞானத்தை சிங்கள மொழிமூலம் பயின்று பல்கலைக் கழகத்தில் பிரவேசித்த இரு மாணவர்களை, பல்கலைக் கழக நிர்வாகத்தினர், "விஞ்ஞானத்தை சிங்களத்திலா அல்லது ஆங்கிலத்திலா பயில விரும்புகிறீர்கள்" எனக் கேட்டுள்ளார்கள். மாணவர்கள் ஆங்கிலத்தில் பயில மறுத்துவிட்டார்கள்.

விஞ்ஞானத்தை சிங்களத்தில் அவர்கள் போதிக்க முடியாதென்று நன்றாக அறிந்து கொண்டும், பல்கலைக்கழக நிர்வாகத்தினர், இப்படியானகேள்விகளை மாணவர்களிடம் கேட்பது நகைப்பிற்கிடமானதும், சிறுபிள்ளைத்தனமானதொன்றுமாகும்.

அம்பலாங்கொட பகுதியிலுள்ள மகாவித்தியாலயத்திலிருந்து 20 மாணவர்கள், பல்கலைக் கழக பிரவேச பரீட்சைக்கு சிங்கள மொழிமூலம் பரீட்சை எடுத்தார்கள். அவர்கள் எல்லோரும் தகுதியுடையவர்களாயிருந்தும், பரீட்சையில் தவறினர்கள். சிலர் வைத்திய பரீட்சை எடுத்தார்கள். அவர்களின் ஆசிரியர்கள், சிங்கள மொழியில் பரீட்சை எழுதியபடியால், அவர்கள் பரீட்சையில் தவறியிருக்கக்கூடுமென கருதுவதால், திரும்பவும் மறுமொழித் தாள்கள் நடுநிலைமை வகிக்கும் சபையினரால் பார்க்கப்படவேண்டுமென்று தெரிவித்துள்ளார்கள்."

பாடசாலைகளில் ஆங்கிலம் சிறந்த வழிகளில் போதிக்க நடவடிக்கை எடுக்காததையிட்டு, கல்வி அமைச்சு அதிகாரிகளை திரு. குலரத்ன கண்டித்தார்.

---

## ஐயாறன்

(4-ம்ப க்கதொடர்ச்சி)

காண், மறப்படுமென்சிந்தை மருள்நீக்கினன்காண், வானவருமறியாத நெறிதந்தான் காண், நறப்படு பூ மலர்தூபந் தீப நல்ல நறுஞ்சாந்தங் கொண்டேத்தி நாளும்வானோர் சிறப்பொடு பூசிக்குந் திருவாரூரில் திருமூலட்டானத்தெஞ் செல்வன்தானே.

— திருநாவுக்கரசர்

# "சேவை மூப்பட்டவணையில் வேற்றுமை கூடாது"

## வ. கி. த. ஆ. சங்கக்கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"அண்மையில் வித்தியா பகுதியார் செய்யவிருக்கும் மாற்றங்கள் ஆசிரியர்களிடையே பலதரப்பட்ட அபிப்பிராயங்களை எழுப்பியுள்ளன. வருடமத்தியில் நிகழவிருக்கும் மாற்றங்களால் ஆசிரியர் பெரிதும் பாதிக்கப்படுவர். அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தினுல் தயாரித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றத் திட்டத்தின்படியோ, அல்லது அண்மையில் அரசாங்கம் சமர்ப்பித்த புள்ளித் திட்டத்தின்படியோ மாற்றங்கள் செய்யப் போதிய காலம் வேண்டுமென்றும், ஆகையால் இடைப் போக்கிலேயே மாற்றஞ் செய்ய முடியுமெனவும் வித்தியாபகுதியார் கூறுகின்றனர். இவைகளை நன்கு ஆராய்ந்து நமது அபிப்பிராயங்களைத் தெரிவித்தல் நல்ல."

வலிகாமம் கிழக்கு தமிழாசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில், திரு. க. இ. குமாரசாமி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர். நிர்வாகசபைக் கூட்டம் அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

பின்வரும் பிரேரணைகள் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறின.

அரசினர் ஆசிரியர்களுடைய சேவை மூப்பட்டவணைவேருகவும், ஏனைய அரசினர் சுவீகரித்த பாடசாலைகளின் ஆசிரியர் சேவை மூப்பட்டவணை வேருகவும் இன்றுவரையிருந்து வருகின்றது. இவ்வித வேற்றுமையால் பல்வேறு முறைகளிலும் தற்போது அரசினர் சுவீகரித்த பாடசாலைகளினசிரியர்கள் நசுக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இவ்வித வேற்றுமை நீக்கப்படடு, சகல முறைகளிலும் ஆசிரியர்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு, இணைக்கப்படும் வரையிலும் அரசினர் ஆசிரியர்களை அரசினர் சுவீகரித்த பாடசாலைகட்குக் கலந்து மாற்றக்கூடாது.

அரசாங்கம் ஏற்றுக்கொண்ட ஆசிரியர்சங்க மாற்றத்திட்டத்திற்கமைவாகவோ அன்றி அரசாங்கம் அண்மையில் தயாரித்துள்ள புள்ளித்திட்டத்திற்கமைவாகவோ தயாரித்த அட்டவணையின்படியே தான் வருட ஆரம்பத்தில் மாற்றங்கள் நிகழவேண்டும்.

மாற்ற இருப்பவர்கள், மாற்றம்பெற்று வருபவர்கள் ஆகிய இருபாலாரதும் மாற்ற அட்டவணை பிரதேசக் கல்விக் கந்தோரிலும், ஆசிரியசங்கக் கந்தோரிலும் ஆசிரியர் பார்வைக்காக வைக்கப்படல் வேண்டும்."

# "நம்பிக்கையான லட்சியமே சமய முன்னேற்றத்துக்கு வழிகோலும்'

## பெற்றார்தினவிழாவில் பேச்சு

புங்குடுதீவு, வியாழன்

சமய இலட்சியம காலத்திற்கேற்ப தன் கொள்கையைக் கடைப்பிடியாமையும் விஞ்ஞான யுகத்தில் கணத்திற்குக் கணம் புதுப்புது ஆராய்ச்சிகளும் அதிசயங்கள் நிகழ்வதுமே மாணவரிடையே ஏற்பட்டுவரும் சமய அவநம்பிக்கைக்கும் காரணங்களாகும். எல்லோரும் ஒத்துக் கொள்ளக்கூடிய நம்பிக்கையான லட்சியமே சமய முன்னேற்றத்திற்கு வழிகோலக் கூடியதாகும்"

புங்குடுதீவு ஸ்ரீகணேசவித்தியாசாலை பெற்றார் தினவிழாவில் 'சமயமும் மாணவரும்' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் திரு. தேவன் மேற்கண்டவாறு கூறினர். விழாவிற்குத் தலைமை வகித்த தீவுப்பகுதி வித்தியாதிகாரி திரு. பாலசிங்கம் பாடசாலையின் தரம் உயரவேண்டுமென்றால் அரசாங்கத்தை நம்பியிருக்காது ஆசிரியருடன் பெற்றாரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அந்த ஒத்துழைப்பினலேயே உயர்ச்சியைக் காண முடியுமென்றும் கூறினர்.

திரு. தேவன் தொடர்ந்து பேசுகையில், கடவுளின் உருவத்தை ஏற்றுக் கொள்ளாவிடினும் அவன் சக்தியை ஆவது ஏற்றுக் கொண்டே ஆகவேண்டுமென்றும் சிலர் அளவிற்கு மிஞ்சிய துன்பமும் துயரமும் மேலிட்டபிறகே கடவுளின் துணையை நாடுகிறார்கள்; அதற்கு போதிய அளவு அஸ்திவாரமின்மையே காரணமென்றும் கூறினர்.

பெற்றோரால் கைக்கொள்ள முடியாத சமய நடைமுறைகளையும் மாணவர்களுக்குத் திணிப்பதனுல்தான் சமயப்பற்றுக் குறைவதற்குக் காரணமாய் இருக்கிறது. அன்பு, அஹிம்சை, எளிமை ஆகியவை சமயத்திற்கு மாறுகும். இதனைப் பேச்சு, நூல், நாடகம் முதலியவற்ருல் மாணவர் மனதில் பதியவைத்தல் வேண்டும்என்றும் திரு. தேவன் கூறினர்.

வழக்கறிஞர் திரு. ப. கதிரவேல் பேசுகையில், பெற்றார்-ஆசிரியரிடையே பரஸ்பர நல்லெண்ணம் இருந்தால் மாணவர் நல்வழியில் செல்ல உதவுமென்றும் ஆசிரியர் மாணவர் எல்லோரையும் ஒரேநோக்குடன் நோக்காது மாணவர் ஒவ்வொருவரினதும் இயல்பை அறிந்து அதன்படி கல்வி கற்பிக்க வேண்டும் என்றும் கூறினர்.

# 200-வது ஆஸ்பத்திரி சுவீப்

## முதற்பரிசு ஒருலட்சம்

கொழும்பு, வியாழன்

அடுத்தமாதம் இரண்டாம் திகதி இழுக்கப்படவிருக்கும் 200-வது இலங்கை ஆஸ்பத்திரி சுவீப்பின் முதற்பரிசுக்கு ஒரு லட்ச ரூபாய் கொடுப்பதென ஆஸ்பத்திரி லோட்டரிசபை முடிவு செய்துள்ளது.

200-வது இலங்கை ஆஸ்பத்திரி சுவீப்புக்குரிய டிக்கட்டுகளின்தொகையை அதிகரிப்பதுடன்பரிசுகளையும்அதிகரிப்பதென்று சபை முடிவு செய்துள்ளது. வழக்கமாக 28 பரிசுகள் மட்டுமே வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆனல் மே மாதம் 2-ம் திகதி இழுக்கப்படும் சுவீப்புக்கு 56 பரிசுகள் கொடுக்கப்படும்.

தனது திட்டத்தை அமுலாக்குவதற்கு திறைசேரியின் அங்கீகாரத்தை ஆஸ்பத்திரி லோட்டரிசபை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

# வாலிபர்சங்க வரவேற்பு

காரைநகர், வியாழன்

காரைநகர் முற்போக்கு வாலிபர் சங்கம் இம்மாதம 26-ம் திகதி நீச்சல்வீரர் ஆனந்தனுக்கு வரவேற்பளிக்கவிருக்கிறது. இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பல விரிவுரையாளர்கள் முதல் தடவையாக ஆனந்தனின் பாராட்டு விழாவில் கலந்துகொள்ள விருப்பதாகவும் அறியப்படுகிறது.



# கீரிமலையில் நீச்சல் போட்டி அடுத்தமாதம் நடைபெறும்

சுழிபுரம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜம் எதிர்வரும் மே மாதம் 11-ம், 12-ம் திகதிகளில் தேசிய விளையாட்டு விழாவொன்றை நடாத்த முடிவுசெய்துள்ளது. சமாஜத் தலைவர் கேட்முதலியார் சி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற சமாஜ செயற்குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆலோசிக்கப்பட்டது.

நீச்சல் போட்டி, மரதன் ஓட்டப் போட்டி, மாட்டுவண்டிப் போட்டின ஆதிய இவ்விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக இருக்க வேண்டும்எனத் தீர்மானிக்கப்பட்டது. மே மாதம் 11-ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்மைதானத்தில் பொலிஸ் அதிபர் திரு. ஜே. வான்சன்டன் ஆதரவில் மாட்டுவண்டிப் போட்டி, மரதன் ஓட்டப்போட்டி என்பனவற்றை நடாத்துவது என்றும், 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கீரிமலைக் கடலில் நீச்சல்போட்டியை நடாத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. நீச்சல் போட்டி வைபவத்திற்கு பிரதம விருந்தினராக நீச்சல் வீரர் திரு. வி. எஸ். வி. ஆனந்தனை அழைப்பதென்றும், அவருக்கு வரவேற்பு உபசாரம் அளிப்பது என்றும் முடிவுசெய்யப்பட்டது. இதற்கான ஒழுங்குகளைக் கவனிக்க உப குழு ஒன்றும் நியமிக்கப் பட்டது.

## ஆசிரியர் இடமாற்றம்

### பெற்றர்—ஆசிரியர்சங்கம் கோரிக்கை

காங்கேசன்துறை, வியாழன்

பாடசாலை ஆசிரியர்கள் அடிக்கடி இடமாற்றஞ் செய்யப்படுவதினல் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் கஷ்டத்திற்குள்ளாகிருர்கள். ஆசிரியர்கள் இடமாற்றம் வருட ஆரம்பத்திற்கு முன்னர் அறிவிக்கப்படுவதோடு மூன்றுமாத கால அவகாசமும் வழங்கப்படுதல் வேண்டும் என்னும் தீர்மானம் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி பெற்றர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேறியது. கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கல்லூரி வளர்ச்சிக்குப் பெரும் உதவிபுரிந்துள்ள காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு பாராட்டுத் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேறியது.

புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

## 'தமிழ் மொழியில் தொடர்புகொள்க'

திருக்கோணமலை, வியாழன்

"இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்கள் இலங்கை அரசாங்கத்துடன் வைத்திருக்கும் தங்கள் கருமங்களை தமிழ் மொழியிலேயே நடத்த வேண்டும். தமிழ்மக்கள் தங்கள் தாய் மொழியை புறக்கணிக்க முற்படின் தமிழ் மக்களால் தான் தமிழ் அழியுமே தவிர வேறொருவராலும் அழிக்கமுடியாது. ஆகவே தமிழ்மக்கள் தங்களை இரண்டாந்தரப் பிரஜையாகக் கருதுகின்ற அரசாங்கத்தின் இன்றைய நிலையை உணர்ந்து தங்கள் காரியங்களைத் தமிழிலே வைத்து கொள்ளவேண்டும். இப்போது ஆரம்பமாகியுள்ள 'தமிழியக்கம்' தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்புடன் பலப்படுத்தப்படும்." இவ்வாறு திருமலை தமிழரசுக் கிளைச் செயலாளர் திரு. பத்மநாதன் அறிக்கையில் கூறியுள்ளார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 12-4-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 கே. சித்திரவேல் — பக்திப் பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 ஈஸ்ட்டர் கத்தோலிக்க நிகழ்ச்சி, 9-30 வாத்திய இசை, 9-45 கிறிஸ்தவ நிகழ்ச்சி.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 கோவில் அஞ்சல், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 கே. ஆர். நடராஜா—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 அபிராமம் ஏ. கணேசன்—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 இசைக்கோவை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி அஞ்சலி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பொங்கியெழும் பாரதம்—சித்திரம், 7-45 வி. எஸ். துரைஸ்வாமி ஐயங்கார்—வீணை, 9-15 ஈஸ்டர்—பேச்சு, 9-30 மெல்லிசை, 9-45 இசைமாலை.

## சுவீப் வரி ஒழிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

ஆஸ்பத்திரி லாட்டரி சுவீப்பால் பரிசு பெற்றவர்கள்மீது அறவிடப்படும் லோட்டரி வரியை ஒழிப்பதென மந்திரிசபை முடிவு செய்துள்ளது.

ஆஸ்பத்திரி லோட்டரி சபையினருக்கு சுகாதார மந்திரி திரு. ஏ. பி. ஜயசூரியா இது சம்பந்தமான விபரத்தை தொரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக மந்திரி ஜயசூரியா தெரிவித்திருப்பதாவது:

"ஆஸ்பத்திரி சுவீப்பினல் கிடைக்கும் ஒவ்வெரு சதமும் நாட்டின் அபிவிருத்திகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இந்தப் பணம் நாட்டிலுள்ள ஆஸ்பத்திரி அபிவிருத்திசேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆஸ்பத்திரி சுவீப்பில் பரிசுபெறுபவர்கள் மீது அறவிடப்படும் சுவீப்வரி விரைவில் ஒழிக்கப்படும்."

## சைவசித்தாந்த மகாசமாஜத் தலைவர்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்னை சைவ சிந்தாந்த மகாசமாஜத் தலைவர் திரு. யு. முத்துசாமிப்பிள்ளை இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்யவிருக்கிருர். அவர் இங்கு பல இடங்களிலும் சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்துவார் என்று தெரிகிறது.

## திருடர்கள் கவனம்

கொழும்பு, வியாழன்

தங்களது வீட்டுக்கு அருகில் யாரும் காரணமில்லாது அலைந்து திரிந்தால், சம்பந்தப்பட்டவரின் மீது சந்தேகம் ஏற்பட்டால், உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்கும்படி கோட்டை, நுகேகொடை, மிரிஹன வாசிகளைப் பொலிசார் கேட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களில் இப் பகுதிகளில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்ததைத் தொடர்ந்தே பொலிஸார் இப் பகுதிமக்களை எச்சரித்துள்ளனர்.

கோட்டே, நுகேகொட, மிரிஹன பகுதிகளில் பொலிஸார் இரவும் பகலும் ரோந்து சுற்றுகின்றனர். இப் பகுதி வில் வசிக்கும் மக்கள் தங்களது வீட்டை விட்டுக் வெளியிடங்களுக்குச் செல்லக் கூடாதென்று பொலிஸார் கேட்டுள்ளனர்.

## 100 நாளில் 163 கொலைகள்

கொழும்பு, வியாழன்

இவ்வருடத்தில் முடிவடைந்த சென்ற நூறு நாட்களில் இலங்கையில் இதுவரை 163 கொலைகள் நடைபெற்றுள்ளன.

# "எனது கொள்கைகள் அமுலாக்கப்பட்டிருந்தால் . . . .

## பொருளாதாரப் பிரச்னை தோன்றியிருக்காது"

—பீலிக்ஸ்

வத்தளை, வியாழன்

"நாட்டின் நிதிமந்திரியாக நான் இருந்தபொழுது எனது கொள்கைகள் அமுலாக்கப்பட்டிருந்தால், நாட்டில் இப்பொழுதுபொருளாதார நெருக்கடி தோன்றியிருக்காது".

மண்டவெல என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு கூட்டமொன்றில் இலாகா இல்லாத மந்திரியும், பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசியுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:

நாட்டில் இப்பொழுது மோசமான பொருளாதார நெருக்கடி தோன்றியுள்ளது. ஆனல் நிதிமந்திரியாகவிருக்கும் பொழுது எனது கொள்கைகள் அமுலாக்கப்பட்டிருந்தால் இந்த நாடு எந்தவிதமான பொருளாதார நெருக்கடியுமின்றி இருக்கும். நான் புதுமையான கருத்துக்களை வெளியிடுவதால், என்மீது பொறுப்பைச் சுமத்த மக்கள் விருபவில்லை. இருந்தபோதிலும் நாட்டின் முன்னேற்றத்துக்காக நான் முன்னின்று உழைக்கின்றேன்.

நிதிமந்திரி பதவியிலிருந்து நான் ராஜினமாசெய்த பின்னரும், தோம்பே மக்கள் என்மீது நம்பிக்கை வைத்தனர். நானும் அவர்கள் மீது நம்பிக்கை வைத்திருக்கின்றேன். நாட்டின் நலம் குறித்தும், நாட்டு மக்கள் குறித்தும் நான் சேவைசெய்வேன் என்பது உறுதி".





கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் இடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

இடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/119

## 'இசைமூலம் தமிழ் வளர்ச்சி'

சாவகச்சேரி, வியாழன்

'இசையின் மூலம் தாவரங்கள் வளர்ச்சியடையவும், நெல் விளைச்சல் அதிகரிக்கவும் வழி ஏற்பட்டுள்ளது. உணவு உற்பத்தியில் கூடிய சிரத்தை எடுக்கும் அரசாங்கம் ஒவ்வொரு விவசாயிக்கும் இசைக் கருவிகளைக் கொடுத்து நெல் விளைச்சலை அதிகமாக்கவேண்டும்' என்று தென் மராட்சி இசைச் சங்கத் தலைவர் திரு. கே. இராமச்சந்திரன் மீசாலை தமிழிசைச் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு இசை விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

தமிழினத்தின் மொழி வளர்ச்சியையிட்டு எல்லாம் தமிழியக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இதே நேரத்தில் இசைச் சங்கங்கள் இசைமூலம் தமிழையும் வளர்க்க முன்வர வேண்டும்.

இன்று எமது மத்தியில் எத்தனையோ இளைஞர்கள் சங்கீதத்துறையில் உயர்ச்சியடையக் கூடிய நிலையிருக்கின்றது. இளைஞர்களுக்கு ஊக்கமளித்து அவர்களைச் சிறந்த இசையாளர்களாக்க வேண்டும்.

தமிழிசைவிழா மாவடிப்பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெற்று வருகிறது. பல கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## யாழ்ப்பாணத்தில் மேதின விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

இவ்வருடம் யாழ்ப்பாணத்தில் மேதினவிழா இடதுசாரிகள் ஐக்கிய முன்னணியினல் கொண்டாடப்படவிருப்பதாகத் தெரிகிறது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளை லங்கா சமசமாஜக் கட்சிக்கு அழைப்பு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. சமசமாஜக் கட்சியின் பதில் கிடைத்தபின்னரே மேதின விழா பற்றிய இறுதி முடிவு வெளியிடப்படுமெனத் தெரிகிறது.

மேதினத்தைச் சிறப்பாகக் கொண்டாட தொழிற்சங்கம், வாலிபர் சங்கம் மற்றும் ஸ்தாபனங்கள் விழா ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

இதற்கான கமிட்டி ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது இக்கமிட்டியின் கூட்டம் இன்று மாலை நடைபெறவிருக்கிறது.

## பதினைந்தாவது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் 15-வது ஆண்டுவிழா இம்மாதம் 14-ம் திகதி நடைபெறும். புனிதவளன் விளையாட்டுக்கழகமுன்றலில்நடைபெறும் ஆண்டுவிழாவில், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு. டி. டி. ஜயசிங்கா, பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஆண்டுவிழாவில், வண. பிதா ஏ. சவேர், குடிசைக் கைத் தொழிற்பகுதி அதிபர் திரு. ஹூதர் ராஜரத்தினம், திரு. இவ்ஸிப்பிள்ளை, திரு. கனகலிங்கம் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## இடமாற்றம்

கொழும்பு, வியாழன்

பொதுசேவை கமிஷனின் காரியதரிசி திரு. நிஸங்கா விஜயரத்ன தமது சொந்த விருப்பப்படி உள்நாட்டு அமைச்சுக்கு மாற்றப்படுவாரெனத் தெரியவருகிறது.

## அவசரகால சட்டம் சரியா?

### அடுத்தமாதம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

1961-ம் ஆண்டு ஏப்ரல் 17-ந் திகதி நள்ளிரவு இலங்கையின் மகாதேசாதிபதியினல் பிரகடனஞ் செய்யப்பட்ட அவசரகாலச்சட்டம் செல்லுபடியாகுமா என்ற பிரச்னைபற்றி யாழ்ப்பாணக் கூட்டுமாஜிஸ்டிரேட் திரு வி. எம். குமாரசாமி முன்னிலையில் இன்றும் வழக்கறிஞர் திரு. எம். பாலசுந்தரம் தொடர்ந்து விவாதித்தார்.

இப்பிரச்னை, யாழ்ப்பாணம் பொலிசாரால் கரும்பாவையைச் சேர்ந்த கே. உமாபதிசிவம் அவசரகாலச் சட்டம் அமுலிலிருக்கும் பொழுது துண்டுப்பிரசுரம் விநியோகித்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கின் பூர்வாங்க ஆட்சேபனையாக எழுப்பப்பட்டது.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. வி. சின்னத்தம்பியும் எதிர்தரப்பில் வழக்கறிஞர் திரு எம். பாலசுந்தரமும்விவாதித்த பின்னர் இப்பிரச்னைக்குரிய தீர்ப்பை திரு. வி. எம். குமாரசாமி மேமாதம் 6-ந் திகதிக்கென ஒத்திவைத்தார்.

## மந்திரிக்கு தமிழில் தந்தி

### தமிழ் எம். பி.க்கள் அனுப்பினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

விசேஷ வர்த்தக ஆசிரிய பயிற்சி வகுப்பு சம்பந்தமாக இரு தடவைகள் அனுப்பிய தந்திகளுக்குப் பதில் கிடைக்காததனையிட்டு வருத்தம் தெரிவித்து கல்வியமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்முதுக்கும் வித்தியாதிபதிக்கும் தமிழ் எம். பி.க்கள் மூன்றாவது தடவையாக தமிழில் தந்தி அனுப்பியுள்ளனர்.

தமிழரசுக் கட்சி எம். பி.க்களான திருவாளர்கள் எஸ். எம். இராசமாணிக்கம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. தர்மலிங்கம், வி. ஏ. கந்தையா, அ. அமிர்தலிங்கம், க. துரைரத்தினம், வி. என். நவரத்தினம், பி. மாணிக்கவாசகர், வி. ஏ. அழகக்கோன், டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன், எம். ஈ. எச்.முகமதுஅலி, செனட்டர்கள் ஜே. நல்லையா, எம். மாணிக்கம் ஆகியோரே விசேட வர்த்தக ஆசிரிய பயிற்சி வகுப்புச் சம்பந்தமாக கல்வி அமைச்சருக்கு தந்தி அனுப்பிவைத்தனர்.

அவர்கள் தமது தந்தியில் தமிழ் மாணவர்களுக்கு இருக்கும் விண்ணப்ப நிபந்தனைகள் மறுக்கப்படுவது கொடூரமான, பாரபட்சமான நடவடிக்கையாகும் என்றும் தமிழ் மொழியில் நடத்தப்படும் விசேட வர்த்தக ஆசிரிய பயிற்சி வகுப்புக்குச் சாதாரண மாணவர்களும் விண்ணப்பிக்கக்கூடிய முறையில் உடனடியாகத் திருத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## இடதுசாரி ஐக்கியம்

### கம்யூனிஸ்ட்—எம். ஈ. பி. உடன்பாடு

கொழும்பு, வியாழன்

இடதுசாரி ஐக்கிய முன்னணி அமைப்பது சம்பந்தமாக எம். ஈ. பி. யும் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரு உடன்பாட்டுக்கு வந்துள்ளன. சென்றவாரக்கடைசியில் நடந்த மகாநாட்டில் இரண்டுகட்சித் தலைவர்களுக்குமிடையில் இறுதி உடன்பாடு ஏற்பட்டது.

கொழும்பு, வியாழன்

ஆசிரியர்களுக்கு எதிராக எடுக்கும் நடவடிக்கைகள், இடமாற்றம், விலக்கல் போன்றவை பொது சேவை கமிஷனுக்கு ஒப்படைக்க வேண்டுமென்று கல்வி அமைச்சு கொண்டுவந்த தீர்மானத்தையிட்டு அரசாங்கம் தற்பொழுது ஆலோசனை செய்து வருகிறது.

## நிஸங்கா விஜயரத்தின

### இடமாற்றம் செய்யப்பட்டார்

கொழும்பு, வியாழன்

அரசாங்க சேவைக் கமிஷனிலிருந்துதிரு. நிஸங்கா விஜயரத்னவை உடனடியாக மாற்றம் செய்வதென்று மந்திரிசபை தீர்மானித்துள்ளது திரு நிஸங்கா விஜயரத்னவின் இடத்திற்கு கைத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசி வி. ஜே. சேரசிங்கா நியமிக்கப்பட்டுள்ளார்.

அரசாங்க சேவைக் கமிஷன் காரியதரிசியாகப் பதவிவகிக்கும் பொழுது பௌத்த சமய ஸ்தாபனங்களில் பதவிவகிப்பது ஒழுங்கல்ல என்று திறைசேரிக் காரியதரிசி, திரு. விஜயரத்னவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் இதுவே இம்மாற்றத்திற்குக் காரணம்.

## கொழும்பில் புயல்

கொழும்பு, வியாழன்

நேற்றிரவு கொழும்புத் துறைமுகத்தில் 60 மைல் வேகத்தில் புயல்காற்று வீசியது. அரைமணிநேரம் வீசிய இந்தப் புயல் காற்றினல் நங்கூரம் பாய்ச்சி நின்ற கப்பல்கள் நங்கூரத்தை அறுத்துக்கொண்டு அங்கும் இங்கும் ஆடி அசையத் தொடங்கின. கப்பல்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளாமல் கவனிப்பதில் இழுவைக் கப்பல்கள் பெரும் சிரமப்பட வேண்டி ஏற்பட்டது.

## 42 பேர் சித்தி

### உபகாரச் சம்பள பரீட்சையில்

வேலணை, வியாழன்

வித்தியா பகுதியால் நடத்தப்பட்ட ஐந்தாம் வகுப்பு 'ஸ்கொலர்ஷிப்' பரீட்சையில் தீவுப்பகுதியில் மொத்தம் நாற்பத்திரண்டு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் வேலணை மத்திய கல்லூரியில் அனுமதிக்கப்படவிருக்கிறர்கள். மேற்படி பரீட்சையில் வேலணை வடக்கு ஆத்திசூடி வித்தியாசாலையில் இருந்து சி. இந்திராணி, ப. ரவீந்திரன், செல்வேந்திரன், கு. சரவணபவன், த. பிரபாகரன் ஆகிய ஐந்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள். இந்த ஐந்து மாணவர்களுக்கும் பரீட்சையில் சித்தியடைந்ததையொட்டி வேலணை வடக்கு பாரதி இளைஞர் கழகத்தினர் பரிசுகள் வழங்கத் தீர்மானித்துள்ளனர். பரிசுகள் கழகம் நடத்தும் பாரதி விழாவின்போது வழங்கப்படுமெனத் தெரிகிறது.

## மலைநாட்டில் பாடசாலைகள்

### தமிழரசுக்கட்சி நிறுவும்

யாழ்ப்பாணம், வியாழன்

பல்லாயிரக்கணக்கான மலைநாட்டுத் தமிழ்ப் பிள்ளைகள் பாடசாலைப் பற்றாக்குறை காரணமாகத் தமிழ் கற்க வசதியற்ற நிலையில் இருப்பதால் தமிழரசுக்கட்சி அப்பகுதியில் பிரத்தியேக தமிழ்ப்பாடசாலைகளை ஸ்தாபித்து அவர்களுக்குத் தமிழ்க்கல்வி வசதி ஏற்றுத்த உத்தேசித்துள்ளது.

அரசாங்க அத்தாட்சிபூர்வமற்ற இத்தனியார் பாடசாலைகளுக்கு ஆசிரியர் தெரிவுசெய்யவேண்டிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேலையில்லாதிருக்கும் படித்த வாலிபர்கள் முன்வந்து இக்கஷ்டத்தைத் தீர்த்துவைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## திரு. ஜோன் புதிய ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

அதிஷ்டச் சீட்டு எடுக்கப்படுமுன் மாஜி மேயர் டாக்டர் தர்மலிங்கம் பிழையான முறையில் தெரிவு நடைபெறுவதாக ஆட்சேபனைதெரிவித்தார். திரு. ஜோனின்பெயர் முதல் பிரேரிக்கப்பட்டபடியால் அவருடைய பெயர் வாக்கெடுப்பிற்கு கடைசியாகவேவாசிக்கப்படவேண்டுமெனவும் கடைசியாகப் பிரேரிக்கப்பட்ட திரு. சோ. இராசரத்தினத்தின் பெயரே முதலில் வாக்கெடுப்பிற்கு விடவேண்டுமென்றும் டாக்டர் தர்மலிங்கம் கூறினர்.

கமிஷனர் திரு. டி. டி. ஜயசிங்கா நகரசபைச் சட்டத்தை வாசித்துக் காட்டி அவ்வாட்சேபனையை நிராகரித்தனர்.

அதிர்ஷ்டச் சீட்டு எடுக்கும் பிரச்னைக்குப் 'பூ' வா 'தலை'யா என்று பார்க்க நாணயம் எறிந்ததில், திரு. ஜோன் கோரிய தலை வந்தமையால் திரு. ஜோனே முதல் சீட்டை எடுக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்ருர்.

மேயருக்குரிய தெரிவின் பின் திரு. ஜோன் ஆசனத்திலமர்ந்ததும் திருவாளர்கள் சோ. இராசரத்தினம், ஜே. எஸ். அழகையா, ரி. எஸ். துரைராசா தவிர்ந்த ஏனையவர்கள் சபையில் புதிய மேயருக்குத் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

அவர்கள் தமது ஆசனத்திலிருக்கும்பொழுது அவருடைய ஆதரவாளர்கள் ஒருவர் மலர்மாலை அணிவித்துக் கௌரவித்தார். சபைக்கூட்டம் முடிந்ததும் புதிய மேயரை அவருடைய ஆதரவாளர்கள் மாலையணிவித்து அழைத்துச் சென்றனர்.

மாவிட்டபுரம், வெள்ளி

தொழிற்சங்க அமைப்பு முறைகளைப் பற்றி படிப்பதற்காக [illegible] விகிதர் சேவை யூனியனின் தலைவர்

## சுவிட்ஸர்லாந்துக்கு மந்திரி செல்வார்

கொழும்பு, வியாழன்

இம்மாதம் 15-ந் திகதி முதல் 21-ந் திகதி வரை சுவிட்ஸர்லாந்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச பாராளுமன்ற மகாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்துகொள்ள விருக்கும் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகாவும், மத்துரட்டை எம். பி. திரு. எம். பி. பண்டாரமும் நாளை புறப்படுகிறர்கள். மந்திரி மைத்திரிபால அதன் பின் சுவீடன் சென்று அங்கு ஒரு வாரம் தங்குவார். பின் ரோமபுரிக்குச் சென்று அடுத்த மாதம் முதல் திகதி நாடு திரும்புவார்.

## பெருமழையால் சேதம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண பகுதியில் இன்று நண்பகலில் பெய்த பெருமழை காரணமாக பல சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இம்மழை காரணமாக கே. கே. எஸ். வீதியில் உள்ள கடையொன்றின் மேல் மாடியிலிருந்து கற்கள் இடிந்து விழுந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தியேட்டரில் புகைக்கத் தடை

கொழும்பு, வியாழன்

சினிமாத் தியேட்டர்களில் படக்காட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கையில் புகைபிடிப்பதற்கு முற்றாகத்தடைவிதிப்பதென்று கொழும்பு மாநகரசபை தீர்மானித்துள்ளது.

திரு. டி. ஆர். செந்தநாயகா இம்மாதம் பிற்பகுதியில் பிரிட்டன் செல்வார். கொழும்புத் திட்ட தொழில் நுட்பக் கார்ப்பரேஷன் திட்டத்தின்கீழ் படிப்பதற்கு,இவரை இலங்கை அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி ([illegible])

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என.......
நாடும் ஏடும் வாழ்த்துகிறது
நடிப்புலகம் போற்றுகிறது

காணத்தயாராகுங்கள்



★ சந்திரபாபு
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி.எஸ். துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி. டி. ராஜகாந்தம்
★ கள்ளபார்ட் நடராஜ்

மற்றும் பலர் நடித்த

சிவகாமி பிக்சர்ஸ்

# குமார ராஜா

திரைக்கதை-வசனம் முரசொலிமாறன் எம். ஏ. | இசை டி. ஆர். பாப்பா | டைரக்ஷன் ஜி. கே. ராமு

நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன் | பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

மனோகரா
(யாழ்ப்பாணம்)

சிவாஜி - ஜெமினி - சாவித்திரி—சரோஜாதேவி
நடித்த
பார்த்தால் பசிதீரும்
தமிழ்பேசும் படம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேல் வீதி 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.